மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 7 • இதழ் 4 • அக்டோபர் 2022 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்

இனிய தீபாவளி வாழ்த்துகள்

RAMRAJ

CELEBRATING 40 YEARS OF TRADITION WOVEN BY TRUST

## சிறப்பிதழ்






RAMRAJ ©

**COTTON LINEN**

**WHITE SHIRTS**

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

RAMRAJ
CELEBRATING 40 YEARS
OF TRADITION
WOVEN BY TRUST

# ராம்ராஜ் காட்டன் நிறுவனம் 40-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு

RAMRAJ



ஆம்
ஆண்டு

சிறப்பிதழ்

என்ற இந்த இனிய நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

ஒரு நதியின் பயணம் எப்போதும் அர்த்தமுள்ளதாகவே அமையும். தனது பயணத்தில் போகிற இடம் அனைத்தையும் வளமாக்கிச் செல்கிறது. வழியெங்கும் பசுமையைத் தழைக்கச் செய்கிறது. எண்ணிலடங்கா உயிர்களுக்கு வாழ்வாதாரமாகத் தன் பயணத்தை மாற்றிக்கொள்கிறது. ஒரே நதியின் நீரானது அருவியாக, கிளை நதியாக, ஏரியாக, குளமாக, சிறிய ஓடையாகப் பல்வேறு வழிகளில் தன்னுடைய பயணத்தை மாற்றி அமைத்துக்கொண்டு பயனளிக்கிறது.

வர்த்தகம் செய்கிற ஒரு நிறுவனத்தின் வெற்றிப் பயணம், அதன் சேவையால் வாடிக்கையாளர்கள் வரை அனைவருக்கும் பயன் தருகிறதா என்பதைப் பொருத்தே அமையும். சமீபத்தில், இந்தியாவின் பாரம்பரிய நிறுவனமான டாடா குழுமத்தின் டாடா விஸ்தாரா விமான நிறுவனத்துடன் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை இதற்கு நல்ல உதாரணமாகக் குறிப்பிடலாம்.

சென்னையில் நடந்த செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நிகழ்வு உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. பல்வேறு நாடுகள் பங்கேற்ற செஸ் ஒலிம்பியாட் கொண்டாட்டத்தின் நினைவாக, ‘கருப்பு வெள்ளை சதுரங்க டிசைன்’ கொண்ட ‘தம்பி’ எனும் வேட்டியினை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் உருவாக்கியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தம்பி’ வேட்டியை அறிமுகம் செய்தார். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தொடக்க விழாவில் தம்பி வேட்டியை அணிந்து பங்கேற்பதற்கு அரிய வாய்ப்பு உருவானது.

பிரதமர் அலுவலகப் பாதுகாப்பு நடைமுறைகளின்படி, பிரதமர் அணிய இருக்கிற ‘தம்பி’ வேட்டி ஜூலை 27 மதியத்துக்குள் டெல்லியில் இருக்க வேண்டும். எனவே, உடனே அனுப்பி வைக்கும்படி பாதுகாப்பு அதிகாரிகள் செய்தி அனுப்பினார்கள். எனவே, வேட்டியை விரைந்து விமானத்தில் டெல்லி அனுப்பும் முயற்சியில் இறங்கினோம். அந்த நேரத்தில் டெல்லி கிளம்பத் தயாராக இருந்த விமான நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் பொறுப்பாளரிடம் ‘பிரதமர் அலுவலகம் சென்று சேர வேண்டிய உடை’ என்று முக்கியத்துவத்தைக் கூறிய பிறகும், பார்சலை வாங்க மறுத்தனர். வேண்டுமென்றால் கார்கோவில் அனுப்பி வையுங்கள் என்றனர். நெருக்கடியான சூழல் ஒரு நிறுவனத்தின் ஊழியருக்குப் புரியவில்லையே என்கிற வருத்தம் உண்டானது.

உடனே, அருகில் இருந்த ‘டாடா விஸ்தாரா’ விமான சேவையின் உதவியை நாடினோம். அங்கிருந்த திரு. குல்ஷன் எனும் இளம் ஊழியரிடம் அவசரத்தை எடுத்துக் கூறியதும், மிகவும் உற்சாகத்துடன் டெல்லியில் உள்ள தங்கள் உயர் அதிகாரியுடன் தொடர்புகொண்டு உடனடியாகத் தேவையான ஏற்பாடு செய்தார். வேகத்துடன் செயல்பட்டு பார்சலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அது பாதுகாப்பாகவும் உடனடியாகவும் டெல்லி சென்று சேர்வதை உறுதி செய்தார். திட்டமிட்டபடி பார்சல் அன்று மதியமே பிரதமர் அலுவலகம் சென்றடைந்தது. வாடிக்கையாளரின் தேவையை உணர்ந்து ஆர்வத்துடன் பணியாற்றிய டாடா ஊழியரின் செயல் என்னை நெகிழச் செய்தது. பாரதப் பிரதமர் அவர்கள் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் உருவாக்கிய ‘தம்பி’ வேட்டியை உடுத்தி, நமது பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் உலகறியச் செய்தார்.

பாரம்பரியமிக்க டாடா குழுமம், வாடிக்கையாளர் நலன் போற்றுவதை நிறுவனக் கொள்கையாகவே வடிவமைத்து செயல்படுத்தி வருகிறது. அந்த நிறுவனத்தின் நோக்கம், ஊழியர்கள் வரை சென்றடைந்து செயல்வடிவம் பெறுவதைப் பாராட்டி நிறுவனத்திற்கும் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதி அனுப்பினேன். அதில் டாடா விஸ்தாரா ஊழியர் திரு. குல்ஷன் அவர்களின் சேவையையும் பாராட்டினேன்.

டாடா விஸ்தாரா நிறுவனத்திற்கு நான் வழங்கிய சேவைக்கட்டணம் சிறிய தொகைதான். ஆனால், ஒரு வாடிக்கையாளரான எனக்கு அந்த நிறுவனம் அளித்த மதிப்பு விலைமதிப்பற்றது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் பங்களிப்பு இதுபோல விலைமதிப்பற்றதாக அமைய, நிறுவனமாக இணைந்து அனைவரும் உழைக்கிறோம். நிறுவனத்திற்கும் வாடிக்கையாளருக்கும் இருக்கும் உறவென்பது, பணப்பரிமாற்றம் செய்கிற வெறும் வர்த்தகம் சார்ந்தது மட்டுமில்லை. அது உறவுப் பரிமாற்றம்... உணர்வுப் பரிமாற்றம். பணப்பரிமாற்றத்தின் வழியாக அது நடைபெறுகிறது.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தைத் தொடங்கும்போது, ஒரு நதியின் பயணத்தைப் போல, நமது நிறுவனத்தின் பயணம் அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும் என்று விரும்பினேன். ‘நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள்’ என்று மற்றவர்கள் சொல்லும்போது, அது சமுதாய வளர்ச்சிக்கும், சக மனிதர்களுக்கும் பயன்படுகிற வெற்றியாக இருக்கிறதா என்பதை எனக்குள் கேட்டுக்கொள்வேன்.

50 கோடி ரூபாய் முதலீடு செய்து நிலம் வாங்கினால், ஒரு வேலையும் செய்யாமல் பத்தாண்டுகளில் அது பல

மடங்காக விலையேறும் என்று பலர் என்னிடம் வந்து பேசி இருக்கிறார்கள். அந்த முதலீட்டில் ஒரு தொழிற்சாலை தொடங்கினால் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றே நான் சிந்தித்து இருக்கிறேன். தொழிற்சாலையில் முதலீடு செய்தால் இரவு பகலாக அங்கு வேலை நடக்க வேண்டும். ஏற்ற இறக்கங்களைச் சந்திக்க வேண்டும். கொரோனா தொற்று, நூல் விலையேற்றம் என எந்த நெருக்கடி எப்போது வருமென்று தெரியாது.



கொரோனா தொற்று காலத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் போடுவதுகூட சிரமமாக இருந்தது. எப்படி உழைத்தாலும் பத்து மடங்கு லாபம் வர வாய்ப்பே இல்லை. ஆனாலும் ரியல் எஸ்டேட் முதலீடு என்னை மட்டும் வளர்த்தெடுக்கும். எந்த நெருக்கடி என்றாலும் தொழிற்சாலையானது சமுதாயத்துக்கும் சக ஊழியர்களுக்கும் பயனளிக்கும். ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தைச் சார்ந்த அனைவருக்கும் வளர்ச்சியாக அமையும். இந்த எண்ணம்தான் அற உணர்வோடு நிறுவனத்தை இயக்கச் செய்கிறது.

40 ஆண்டுகளாக ராம்ராஜ் நிறுவனத்தின் பயணம் இலக்கை நோக்கி மட்டுமின்றி, அர்த்தமுள்ளதாகவும் அமைந்திருக்கிறது. வேட்டி உடுத்துவது அவமானமாகக் கருதப்பட்ட நிலையை மாற்றி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வேட்டி அணிவதைப் பெருமிதமாக உணரச் செய்திருக்கிறோம். கைராட்டை முதல் காற்றாலை வரை பாரம்பரியத்தையும், தொழில்நுட்பத்தையும் சரியாகக் கலந்து, வேட்டி விற்பனையில் இந்தியா முழுவதும் வெற்றிக்கொடியை நாட்டியிருக்கிறோம்.

வாடிக்கையாளர்களை வாசகர்களாக மாற்றி நல்ல எண்ணங்களை விதைக்க நான்கு மொழிகளில் இதழ்களை நடத்துகிறோம். கல்வி, சுற்றுச்சூழல், உடல்நலம், மனவளம், ஆன்மீகம் எனச் சமூக வளர்ச்சியில் ஆத்மார்த்தமாகப் பங்கேற்கிறோம்.

நெசவாளர் வாழ்வை மேம்படச் செய்வதும், பாரம்பரிய வேட்டியின் பெருமையை மீட்டெடுப்பதும் நமது நிறுவனத்தின் உயர்ந்த நோக்கம். இந்த உயர்ந்த நோக்கங்களை நிறைவேற்ற, நெசவாளர்கள், பணியாளர்கள், தொழிலாளர்கள், விற்பனையாளர்கள், டீலர்கள், வாடிக்கையாளர்கள் என அனைவருடனும் ஒருங்கிணைந்து செயலாற்றுகிறோம். நாற்பது ஆண்டுகளாக நமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களிடம் மாறாத நம்பிக்கையைப் பெற்றுள்ளோம்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனம், நெசவாளர் வாழ்வை மேம்படுத்தவும், பாரம்பரியத்தை மீட்டெடுக்கவும் ஓர் இயக்கமாக ஊக்கமுடன் செயல்படுகிறது. உறவுகளை மேம்படுத்தி தலைமுறைகள் தாண்டிய அர்த்தமுள்ள இந்த வெற்றிப் பயணம் இனிதே தொடர, உங்கள் அனைவரின் அன்பும் ஆதரவும் எங்களைத் தொடர்ந்து வழிநடத்த வேண்டுமெனப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.


எங்களின் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், எங்களுடன் இணைந்து பணியாற்றும் அன்பான அலுவலர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள், 'வெண்மை' வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். நம் உள்ளங்களில் நம்பிக்கையின் தீபம் ஒளிரட்டும். இல்லங்களில் மகிழ்ச்சி நிலைக்கட்டும்.

குரு அருள்
வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**

# ஜெயிக்க வைத்து ஜெயிக்க வேண்டும்!



ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜனிடம் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில், "ஆரம்பத்தில் ராம்ராஜ் நிறுவனம் மட்டுமே வேட்டி விற்பனை செய்தது. இப்போது நிறைய நிறுவனங்கள் வந்துவிட்டன. இந்தப் போட்டியை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?" என்று கேள்வி கேட்டனர். அதற்கு அவர் சொன்ன பதில், யாருமே எதிர்பார்க்காதது.

"அவர்கள் யாருமே என் போட்டியாளர்கள் இல்லை. அவர்கள் என்னைப் பின்பற்றுகிறவர்கள். அப்படித்தான் நான் பார்க்கிறேன். இறைச்சிந்தனையைத் தன் வார்த்தைகளில் தத்துவங்களாக ஒரு குரு சொல்லி வைப்பார். அவரைப் பின்பற்றும் சீடர்கள் அதனை எல்லோரிடமும் எடுத்துச் செல்வார்கள். அப்படி, வேட்டி கட்டும் பழக்கத்தை இவர்கள் எல்லோரும் மக்களிடம் எடுத்துச் செல்கிறார்கள். எனவே, அவர்கள் என் போட்டியாளர்கள் இல்லை. என்னைப் பின்பற்றுகிறவர்கள்" என்றார் அவர்.

'நாம் செய்பவை அனைத்தும் நமக்கே திரும்பி வரும்' என்ற வாழ்க்கைத் தத்துவத்தை இப்படி அவர் எளிமையாகச் சொன்னார். இதை உணர்த்தும் கதை ஒன்று உண்டு.

பல வியாபாரங்கள் செய்து வாழ்வில் தோற்ற ஒருவன், என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் அந்த ஊருக்கு வந்த துறவி ஒருவரைச் சந்தித்து தனது நிலைமையைச் சொல்லிப் புலம்பினான்.

"நீ வியாபாரம் செய்ய முடிவெடுத்தது தவறல்ல. என்ன வியாபாரம் செய்யவேண்டும் என்று முடிவு செய்ததில்தான் தவறு. மக்களுக்கு எது தினமும் தேவைப்படுகிறதோ, எது வாங்க வாங்கத் தீர்ந்துபோகிறதோ, அதை வியாபாரம் செய். உனக்கு வெற்றி கிடைக்கும்" என்றார் அவர்.

இவனுக்கு அப்போதுதான் உண்மை புரிந்தது. 'மக்களின் தேவை என்ன என்று அறிந்துகொள்ளாமல், நமக்கு சுலபமாக இருக்கிறதே என்று முடிவுசெய்து இத்தனை

நாள் வியாபாரம் செய்துவந்தோம். அதனால்தான் தோல்வி ஏற்பட்டது' என்று உணர்ந்துகொண்டான். தன் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் ஆலோசித்தான். அதன்பின் அந்த ஊரில் ஒரு காய்கறிக் கடையைத் திறந்தான்.

பக்கத்து ஊர்களுக்குச் சென்று காய், கனிகளை வாங்கி வந்து தன் கடையில் நியாயமான விலைக்கு விற்றான். தரமும் நேர்மையும் இருந்ததால், வியாபாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. வாடிக்கையாளர்கள் பெருகினர். துறவியின் வாக்கு பலித்ததை உணர்ந்தான். அவரைத் தேடிப் போய் மனப்பூர்வமாக நன்றி சொன்னான்.

சில மாதங்கள் கடந்தன. இவனது வியாபாரத்தையும், அங்கு மக்கள் வந்துபோவதையும் பற்றிக் கேள்விப்பட்டார் பக்கத்து ஊர் செல்வந்தர் ஒருவர். இவன் கடைக்கு எதிரே இருந்த காலியிடத்தை வாங்கி, அங்கு மிக பிரமாண்டமான கட்டடம் ஒன்றைக் கட்ட ஆரம்பித்தார். 'என்ன கட்டுகிறார்கள்' என்று இவன் விசாரித்தான். 'இங்கு மிகப்பெரிய வணிக வளாகத்தை அந்தச் செல்வந்தர் கட்டுகிறார். அதில் காய்கறி, பழங்கள் முதல் மளிகைச் சாமான்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் வரை அனைத்தும் கிடைக்கும்' என்று கூறினார்கள்.

அதைக்கேட்டதும்இவனுக்குபயம்வந்தது.'இத்தனை ஆண்டுகளாக எத்தனையோ வியாபாரங்களில் நஷ்டத்தைச் சந்தித்தோம். இப்போதுதான் ஓரளவு வியாபாரம் ஆகி நல்ல நிலைக்கு வந்துள்ளோம். இந்நிலையில் இப்படி ஒரு போட்டியா? இந்தக் கடை வந்தால், எல்லோரும் அங்கு செல்லவே விரும்புவார்கள். என் கடையை யார் எட்டிப் பார்ப்பார்கள்? இது என்ன சோதனை' என்று கலங்கினான்.

உடனே துறவியிடம் ஓடினான். நடப்பதைச் சொல்லி, "நான் இப்போது என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான். துறவி தெளிவான கட்டளையை அவனுக்கு இட்டார். "நான் சொல்வதைப் போலச் செய். தினமும் காலை உன் கடையைத் திறக்கும்போது, 'இன்று எனக்கு வியாபாரம் நன்றாக நடக்கவேண்டும்' என்று பிரார்த்தனை செய். அப்படியே எதிர்ப்புறமும் திரும்பி, 'அந்தப் புதிய கடையிலும் நன்றாக வியாபாரம் நடக்க வேண்டும்' என்று பிரார்த்தனை செய். ஒப்புக்காகப் பிரார்த்தனை செய்யாமல் மனப்பூர்வமாகச் செய். விருப்பத்துடன் செய். நல்லதே நடக்கும்" என்றார்.

''என்னது? எனது போட்டியாளரும் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைப்பதா? அவருக்கும் நன்றாக வியாபாரம் நடக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்வதா?" அவன் குழம்பினான்.

''ஆமாம்! அப்படித்தான் செய்ய வேண்டும். நீ அவருக்குக் கூறும் ஒவ்வொரு வாழ்த்தும் நல்லெண்ணமும் உனக்கே பல மடங்காகத் திரும்ப வரும். அதேபோல அவருக்குத் தீமை நினைத்தால், அதுவும் உனக்கே திரும்ப வரும்" என்றார் துறவி.

அவன் தயங்கி நின்றான். "தவறாக யோசிக்காதே! நான் சொன்னதைச் செய். கூடவே இன்னொரு விஷயம், அவரைச் சந்திக்க நேர்ந்தால், ஒரு போட்டியாளரைப் பார்ப்பது போலப் பார்க்காதே. நெருங்கிய நண்பரை, நம் நலம்விரும்பியைப் பார்ப்பது போலப் பார்த்து புன்னகை செய். அவரின் நலம் விசாரி" என்றார்.

அந்தத் துறவி தன் வாழ்க்கையை மாற்றியவர் என்பதால், அவர்மீது இவனுக்குப் பெரும் மதிப்பு உண்டு. அதனால் அவர் கூறியதைப் போலவே செய்தான். அந்தக் கட்டடம் கட்டுவதற்கு தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்தான். தினமும் முழுமனதுடன் தனக்காகவும், அந்த எதிர்க்கடைக்காரருக்காகவும் பிரார்த்தனை செய்து வந்தான். எதிர்க்கடைக்காரரைப் பார்க்கும்போதெல்லாம் புன்னகை செய்து நலம் விசாரித்தான்.

இதனால் நாளடைவில் இருவரும் நல்ல நண்பர்கள் ஆனார்கள். தன் கடைக்கு காய்கறிகள், பழங்களைக் கொள்முதல் செய்யும் பொறுப்பை இவனிடம் கொடுத்தார் அவர். அதன்விளைவாக இவனுக்குப் பலமடங்கு பிசினஸ் கிடைத்தது. விரைவிலேயே இவன் கடையும் வளர்ந்து, பெரிய காய்கறி வளாகமாக மாறிவிட்டது. மெல்ல மெல்ல அந்தப் பகுதி முழுக்க வளர்ந்து, ஒரு மிகப்பெரிய வணிகச் சந்தையாக மாறிவிட்டது. மக்கள் கூட்டம் அதிகரிக்க, அவனுக்கும் வியாபாரம் பலமடங்கு கூடியது.

நேர்மறையான அணுகுமுறை ஒருவரின் வாழ்க்கையை எந்தளவு மாற்றும் என்பதற்கு உதாரணம் இது. அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி இதைத்தான் வலியுறுத்துவார். அவரின் வாழ்த்தும் பயனும் பயின்றவர்களுக்கு இந்த உண்மை புரியும்.

நாம் இந்த உலகத்தில் தனியாக இல்லை. எல்லாம் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தவை. நமது எண்ணங்கள்தான் நமது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் பங்கு வகிக்கின்றன. ஒருவரைப் பற்றி நமக்கு ஏற்படும் நல்ல சிந்தனையோ, கெட்ட சிந்தனையோ, அவரைத் தீர்மானிப்பதில்லை. நம்மையே தீர்மானிக்கின்றன. எனவே வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புகிறவர்கள் எப்போதும் நேர்மறையான சிந்தனையையே வளர்த்துக்கொள்ள வேண்டும். அருட்தந்தையின் எண்ணம் ஆராய்தலின் அடிப்படைத் தத்துவம் இது.

"பிசினஸில் அடுத்தவர்களை ஜெயிப்பது முக்கியம் இல்லை. அடுத்தவர்களை ஜெயிக்க வைத்து நாமும் ஜெயிக்க வேண்டும். அதுதான் முக்கியம்" என்று இதை வைத்தே சொல்வார் திரு. கே.ஆர்.நாகராஜன். ●



# ராம்ராஜ் காட்டனின் 40 ஆண்டு பயணம்!

'வேட்டியைக் கண்டுபிடித்தது பெயர் தெரியாத யாரோவாக இருக்கலாம்; ஆனால் அதில் வித்தியாசம் காட்டி வெற்றி பெறச் செய்தவர், 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன். வேட்டிக்கு ஒரு 'பிராண்ட்' உருவாக்கி விற்பனை செய்த முதல் நிறுவனம் ராம்ராஜ் காட்டன். திருப்பூர் மாவட்டம் அவிநாசிக்கு அருகேயுள்ள கைகாட்டிப்புதூர் என்ற சிறிய கிராமத்தில் பிறந்த நாகராஜன், பலருக்கும் வழிகாட்டியாக மாறியவர். ராம்ராஜ் காட்டனின் 40 ஆண்டுப் பயணத்தை அவர் விவரிக்கிறார்:

"1983–ம் ஆண்டு திருப்பூரில் ஒரு சிறிய அறையில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தை ஆரம்பித்தபோது, தகித்துக் கொண்டிருந்த கனவும் தளராத நம்பிக்கையுமே எனது மூலதனம். வேட்டியை நான் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. அது, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நம் முன்னோர்கள் உருவாக்கிய முதல் உடை. அதில் வித்தியாசங்களைக் காட்டி வெற்றி பெற முடிந்ததற்குக் காரணம், என் நம்பிக்கை.


நான் வியாபாரத்தோடு தொடர்பில்லாத எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். ஆனாலும், 'வியாபாரம் செய்ய வேண்டும்' என்று 13 வயதிலேயே தீர்மானித்தேன். வேட்டித் தொழிலின் அடிப்படை நுணுக்கங்களைத் தென்னிந்தியா முழுக்க வியாபாரம் செய்து பல ஆண்டுகள் கற்றுக்கொண்டேன். என் 23 வயதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தை ஆரம்பித்தேன்.

தரமான வேட்டிகளை ஒரு 'பிராண்ட்' பெயர் வைத்து விற்றால்தான், அடுத்த முறை வாங்குகிறவர்கள் அந்தப் பெயரைச் சொல்லிக் கேட்டு வாங்குவார்கள் என்று நம்பினேன். அப்பா பெயர் ராமசாமி. என் பெயர் நாகராஜன். இரண்டையும் சேர்த்து 'ராம்ராஜ்' என்று பெயரை வைத்து நிறுவனத்தைத் தொடங்கினேன். இன்று 'ராம்ராஜ்' என்றாலே 'வேட்டி' ஞாபகம் வருகிறது. உழைப்பு, நேர்மை, தரம் என நம்பிக்கையான இழைகளால் இந்த வெற்றி நெய்யப்பட்டது.

திருப்பூரில் ஒருவர் பிசினஸுக்கு வந்தால், அவர் பனியன் ஏற்றுமதித் தொழிலையே தொடங்குவார். ஆனால் நான் வேட்டித் தொழிலில் இறங்கியபோது, பலரும் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். 'கலர் கலராக ஃபேஷன் வந்து கொண்டிருக்கும்போது, வெள்ளை நிற வேட்டி சட்டைகளை எப்படி விற்பனை செய்ய முடியும்?' என்று எதிர்மறையாகக் கேட்டார்கள். 'மற்றவர்கள் சொல்வது

இருக்கட்டும்... உண்மை என்ன என்பதை அனுபவத்தில் தெரிந்துகொள்வோம்' என்று களத்தில் இறங்கினேன். மற்றவர்கள் சொன்னதில் உண்மை ஓரளவு இருந்தாலும், அவர்கள் மறந்த ஒரு விஷயம் எனக்குப் பிடிபட்டது. 'வேட்டி என்பது, மற்ற உடைகளைப் போல ஃபேஷன் என்று காலத்திற்கு ஒன்றாக வரும் உடையல்ல. அது நம் பண்பாடு, பாரம்பரியம். மக்களின் வாழ்வில் நடக்கிற நல்லது, கெட்டது எல்லாவற்றிலும் வேட்டிக்கு முக்கிய இடம் இருக்கிறது. காலமாற்றத்தின் காரணமாகச் சில வசதிக்குறைவுகள் வேட்டியில் இருக்கிறதே தவிர, வேறொரு குறையும் இல்லை' என்ற உண்மை புரிந்த பிறகு, குறைகளை நீக்கி நிறைகளைப் பெருக்கும் முயற்சியை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் மேற்கொண்டது.

வேட்டி அணிபவர்களுக்காக வெள்ளை நிற உள்ளாடைகள், வெள்ளை நிற செல்போன் உறை, பாக்கெட் வசதியுடன் வேட்டிகள், கட்டத் தெரியாதவர்கள் ஒட்டிக்கொள்ளும் 'வெல்க்ரோ' தொழில்நுட்பம் என்று வேட்டியில் விதவிதமான பயன்பாட்டுச் சௌகரியங்களை உருவாக்கினோம். குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் என எல்லா வயதினரையும் வேட்டியை ஆர்வமாகக் கட்டவைத்து, இன்று இந்தியாவின் நம்பர் 1 பிராண்டாக வளர்ந்திருக்கிறோம்.



'இது நம் பண்பாட்டை மக்களிடம் எடுத்துச் செல்லும் ஒரு வாய்ப்பு. இது எனக்குத் தெரிந்த தொழில். இதில் புது மார்க்கெட்டை என்னால் உருவாக்க முடியும்' என்று நான் உறுதியாக நம்பினேன். ஒருவேளை ஏற்றுமதித் தொழிலில் இறங்கியிருந்தால், நான் பெரும் பணக்காரனாக இருந்திருக்கலாம். ஆனால், பணம் என் நோக்கம் இல்லை. 'நெசவாளர்களுக்கு வாழ்வாதாரம் தர வேண்டும்' என்பதே என் முதல் நோக்கமாக இருந்தது. அந்த நல்ல நோக்கம் என்னை ஜெயிக்க வைத்தது.

மார்க்கெட்டிங் வேலையில் தெருத் தெருவாக ஏறி இறங்கிய காலத்தில் ஓர் அடிப்படையான விஷயம் எனக்குப் புரிந்தது... 'தரமான பொருளுக்கு எப்போதுமே வரவேற்பு உண்டு'. 'மலிவான ஒரு பொருளை விலை குறைவாக விற்றால், மக்கள் அதையே விரும்புவார்கள்' என்று ஒரு தவறான கருத்து எல்லா வியாபாரத்திலும் இருக்கிறது. புது உடை எடுக்கும் பலரும், அது அடுத்த வருடம் வரை கிழியாமல் உழைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். சீக்கிரமே கிழிந்து விடுகிற, சாயம் போகிற உடையை ஒருமுறை ஏமாந்து வாங்கலாம். மறுமுறை நிச்சயம் வாங்க மாட்டார்கள் என்பது என்னுடைய 40 ஆண்டு கால அனுபவம்.

கடந்ததலைமுறைமனிதர்கள்வேட்டி கட்டிக்கொண்டு வெளியில் செல்லும்போது, பையில் இன்னொரு வேட்டியையும் எடுத்துக்கொண்டு செல்வார்கள். கட்டியிருக்கும் வேட்டி திடீரெனக் கிழிந்துவிட்டால் என்ன செய்வது என்ற எச்சரிக்கை உணர்வுதான். 'வேட்டி என்றால், அது தரம் குறைந்ததாகவே இருக்க வேண்டும்' என்ற நினைப்பை மாற்றியது ராம்ராஜ் நிறுவனம்தான். 'நான் தரமாகத் தருகிறேன்' என வேட்டிகளை அறிமுகம் செய்தபோது பலரும் போட்டி போட்டுக்கொண்டு வாங்கினார்கள். தமிழர் பண்பாட்டின் அடையாளமான வேட்டி, மேற்கத்திய கலாச்சாரத்தின் பாதிப்பால் தொலைந்து போக இருந்தது. அதற்கு சர்வதேச அங்கீகாரத்தையும் மரியாதையையும் பெற்றுத் தந்தது ராம்ராஜ் நிறுவனம்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்துக்கு தரமான வேட்டிகளை உருவாக்கித் தரும் ஆயிரக்கணக்கான நெசவாளர்களுக்கு இன்று வாழ்வாதாரம் கிடைத்துள்ளது. தரமான தயாரிப்புகளை நாங்கள் தருவதால், விநியோகம் செய்யும் டீலர்களும் விற்பனையாளர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். வேட்டி தயாரிப்புத் தொழிலை முறைப்படுத்தியதால், பல நூறு பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடிகிறது. தங்கள் பாரம்பரிய உடை தரமாகக் கிடைப்பதால் மக்களுக்கும் திருப்தி. இப்படி நெசவாளர்கள், விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் என்று மூன்று தரப்பினரும் மகிழ்ச்சியாக இருப்பதால்தான் நாங்கள் நன்றாக இருக்கிறோம்.

நான் குருவாக ஏற்றுக் கொண்டிருக்கும் வேதாத்திரி மகரிஷி, 'நெசவாளர்கள், விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோர்தான் இந்தத் தொழிலின் ஆணிவேர். அவர்களின் நலன் பாதிக்காத முடிவுகளைத் துணிந்து எடு. இவர்களில் ஒருவரின் நலன் பாதிக்கும் என்றாலும் அந்த முடிவைக் கைவிடு' என்ற தொழில் மந்திரத்தை எனக்குச் சொன்னார். இன்றுவரை அதைக் கடைப்பிடிக்கிறேன்.

நாம் வாடிக்கையாளர்களுக்கு உண்மையாக இருந்தால், வாடிக்கையாளர்கள் நமக்கு உண்மையாக இருப்பார்கள் என்கிற அடிப்படை உண்மையே 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வேராக இருக்கிறது."●

# வேட்டியை நேர்மறையாக மாற்றிய விளம்பரங்கள்!

“நெசவாளர்கள் மீது கொண்ட அபிமானமும், வேட்டி கட்டியதால் எனக்கு ஏற்பட்ட அவமானமும் எனக்குள் புதிய உத்வேகத்தைக் கொடுத்தது” என்கிற ராம்ராஜ் காட்டன் நிறுவனர், திரு. கே.ஆர். நாகராஜன் அவர்களின் அனுபவம் வேட்டி விளம்பரத்தில் புதிய அத்தியாயத்தையே தொடங்கி வைத்தது.

‘வேட்டி உடுத்துவது நாகரிகம் இல்லை’ என்று பலரும் நினைத்துக்கொண்டிருந்த காலத்தில், வேட்டி கட்டியவர்களை மதிப்பிற்குரியவர்களாக மாற்றிக்காட்டிய பெருமை ராம்ராஜ் காட்டனுக்கு உண்டு. ஏமாற்றங்களையும் அவமானங்களையும் பாசிட்டிவாக மாற்றிக்காட்டிய தனது அனுபவத்தைச் சொல்கிறார் ‘ராம்ராஜ் காட்டன்’ நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன்.

‘‘மற்றவர்களிடம் ‘வேட்டி உடுத்துங்கள்’ என்று சொல்வதற்கு முன்பு, நான் வேட்டி உடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், எங்கு சென்றாலும் வேட்டியை மட்டுமே உடுத்தினேன். சென்னையில் ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. அதற்காக நண்பர்கள் சிலருடன் ஓட்டலுக்குச் சென்றபோது, என்னை மட்டும் உள்ளேவிட மறுத்துவிட்டார் செக்யூரிட்டி. ‘வேட்டி கட்டியவர்களுக்கு எங்கள் ஓட்டலில் அனுமதி இல்லை’ என்று தடுத்து என்னை வெளியே அனுப்பினார்கள். ‘நான் வேட்டியைத் தவிர வேறு உடையை உடுத்துவதில்லை’ என்கிற கொள்கையை விளக்கிய பிறகும், உள்ளே போக அனுமதிக்கவில்லை. அவர்கள் என்னை அவமானப்படுத்தவில்லை, நம் பாரம்பரியத்தை அவமானப்படுத்தினார்கள்.

அந்த ஓட்டலின் வாசலில் இருந்த ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்தபடி, ‘இந்த நிலையை மாற்றவே முடியாதா?’ என்று யோசித்தேன். புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானம் வந்ததுபோல, எனக்கு அந்த மரத்தின் அடியில் ஞானம் வந்தது.

‘வேட்டியைப் பற்றிய நெகட்டிவான எண்ணம் மாறாமல், இந்த நிலை மாறாது’ என்று உணர்ந்தேன். ‘வேட்டியைப் பற்றிய நெகட்டிவான எண்ணங்கள் என்னவெல்லாம் இருக்கின்றன’ என்று மனதில் ஒரு பட்டியல் போட்டேன். உடனடியாக தமிழகத்தின் முக்கியமான விளம்பர நிறுவனத்தை அழைத்தேன். ‘‘வேட்டி உடுத்துவதால் என்னென்ன அவமானங்கள் ஏற்பட்டதோ, அதையெல்லாம் பாசிட்டிவாக மாற்றி என் அனுபவத்தைச் சொல்கிறேன். அதைப் பிரமாண்டமான விளம்பரப் படமாக எடுத்துக்கொடுங்கள்” என அவர்களிடம் விவரித்தேன்.

‘வேட்டி உடுத்துபவர்கள் பாமரர்கள்’ என்ற எண்ணம் இருக்கிறது. “மக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கிற ஒரு நடிகரை ‘பிராண்ட் அம்பாசிடராக’ நடிக்க வைத்து அதை மாற்றுவோம்” என்றேன். நடிகர் ஜெயராம் அவர்களை ஒப்பந்தம் செய்தோம். ‘வேட்டி உடுத்துபவர்கள் நடந்து வருவார்கள்; அதிகபட்சமாக சைக்கிளில் வருவார்கள்’ என்ற எண்ணம் இருந்தது. “விலையுயர்ந்த பென்ஸ் காரில் வந்து ஜெயராம் கம்பீரமாக இறங்கும்படி ‘ஷாட்’ இருக்க வேண்டும்” என்றேன். “எந்த ஐந்து நட்சத்திர ஓட்டலில் வேட்டி கட்டியதால் என்னை உள்ளேவிட மறுத்தார்களோ, அதேபோன்ற ஐந்து நட்சத்திர ஓட்டலில், வேட்டி கட்டிக்கொண்டு பென்ஸ் காரிலிருந்து இறங்குகிற ஜெயராமுக்கு கதவைத் திறந்துவிட்டு செக்யூரிட்டி சல்யூட் அடிக்க வேண்டும்” என்றேன். “வேட்டியின் பெருமையை உணராமல் அவமானப்படுத்திய கோட்–சூட் அணிந்த ஓட்டல் நிர்வாகிகள், வேட்டி கட்டிய நம் ஹீரோவைப் பார்த்துப் பதறி எழுந்து வணக்கம் வைத்து உள்ளே வருமாறு பணிவுடன் அழைக்கும்படி காட்சி அமைய வேண்டும்” என்கிற விருப்பத்தைச் சொன்னேன். கோட் சூட் போட்ட முதலாளிக்கு உதவியாளராக, நவநாகரிக உடையணிந்த இளம்பெண்கள் இருப்பார்கள். அதேபோன்று வேட்டி அணிந்த ஜெயராமின் உதவியாளராக, படித்த, பல மொழிகள் அறிந்த நவநாகரிக இளம்பெண் பணிபுரிவதைப் போலக் காட்சிகள் வைத்தோம்.

வேட்டி கட்டிய அந்த மதிப்புக்குரியவர், மீட்டிங் நடக்கும் கான்ஃப்ரன்ஸ் அறைக்குள் நுழையும்போது, கோட் சூட் போட்ட பல பெரிய மனிதர்கள் எழுந்து நின்று வணக்கம் வைத்து, அவர் அமர்ந்த பிறகே அமரும்படிச் செய்தோம். அந்த அறையிலிருந்து அவர் வெளியேறும்போது, இசைக் கருவிகளை வாசித்துக்கொண்டிருக்கும் கலைஞர்கள் வாசிப்பதை ஒரு கணம் நிறுத்தி, வேட்டி கட்டிய அவருக்கு வணக்கம் தெரிவித்து மீண்டும் இசைப்பார்கள். பொதுவாக இசை, நாட்டியம் போன்ற கலைகளைக் கவனம் குவித்து மனம் ஒன்றி நிகழ்த்த வேண்டும். அத்தகைய கலைஞர்கள்கூட வேட்டி கட்டியவரைக் கண்டதும் தங்கள் கவனத்தை அவர் பக்கம் திருப்பி மரியாதை செலுத்தினார்கள் என வைத்தோம்.



ஒரு குழந்தை காத்திருந்து பூங்கொத்தை அவருக்குப் பரிசாக அளிக்கும். இதற்கும் ஒரு காரணம் உண்டு. ஆரம்ப காலத்தில் குடும்பமாக எங்கேனும் செல்லும்போது, உறவினர்களின் குழந்தைகள் சிலர், “பேன்ட் சட்டை அணிந்தால்தான் உங்களோடு வருவோம். எங்கள் நண்பர்கள் உங்களை வேட்டியில் பார்த்தால் கேலி செய்கிறார்கள்” என்று சொன்னதுண்டு. நாளைய தலைமுறையின் மனதில் வேட்டியைப் பற்றி இப்படித் தவறான எண்ணம் இருப்பது என்னை வெகுவாக பாதித்தது. அந்தப் பாதிப்பில்தான், குழந்தைகளே விரும்பி வேட்டி கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் ராம்ராஜ் காட்டன் ‘லிட்டில் ஸ்டார்ஸ்’ வேட்டிகளை அறிமுகம் செய்தது. அது இன்றைய குழந்தைகளின் விருப்பத்துக்குரியதாகவும் உள்ளது.

ஜெயராம் வெளியே வரும்போது, இளைஞர்கள் தங்களை மறந்து வணக்கம் வைப்பார்கள். ‘இளைஞர்களுக்கு வேட்டி ஆகாது’ என்ற எண்ணம் இருப்பதாகக் கருதப்பட்ட காலத்தில், அவர்கள் வேட்டிக்கு மதிப்பு செய்வதாகக் காட்சி அமைத்தோம். அங்கிருக்கும் காவல்துறை உயரதிகாரி, அமைச்சர் ஆகியோர் வேட்டி கட்டிய ஜெயராமுடன் நட்பாகக் கைகுலுக்குவார்கள். அரசியலிலும் அதிகாரத்திலும் உள்ளவர்கள் எல்லோரும் வேட்டி கட்டியவரை உயர்வாகக் கருதுவதாக இருக்கும் அந்தக் காட்சி அமைப்பு.



மதிப்பின் உச்சமாக, ஓட்டலுக்கு வெளியே கம்பீரமாக நிற்கும் யானை ஒன்று பிளிறலோடு தனது துதிக்கையைத் தூக்கி வேட்டி கட்டிய ஜெயராமுக்கு சல்யூட் வைக்கும். பொதுவாக யானைக்கு வெண்மை நிறம் ஆகாது என்றும், அந்நிறத்தில் உடை உடுத்தியவர்களை அது விரட்டுமென்றும் கூறுவார்கள். ‘உலகமே மதிக்கும் யானை கூட, வேட்டி கட்டினால் நமக்கு மதிப்பளிக்கும்’ என்ற கருத்தாக்கத்தோடு இந்த விளம்பரம் உருவாக்கப்பட்டது. இப்படி ‘சல்யூட் ராம்ராஜ்க்கு சல்யூட்’ என்று எடுக்கப்பட்ட விளம்பரத்தின் ஒவ்வொரு காட்சியுமே, வேட்டி கட்டியவர்களுக்கு ஏற்பட்ட அவமானங்களைப் போக்கி, அவர்களுக்கு மதிப்பையும் மரியாதையையும் உருவாக்குவதாக அமைந்திருக்கும். வேட்டி விளம்பரங்களில் ‘மைல்கல் விளம்பரம்’ என இதைக் குறிப்பிட்டனர்.

வேட்டியின் மீது இருந்த எல்லா நெகட்டிவ் எண்ணங்களையும் பாசிட்டிவாக மாற்றிக் கற்பனையாக விளம்பரம் எடுத்தோம். அந்தக் கற்பனைகள் அனைத்தையும் இன்று நடைமுறையில் நிஜமாக மாற்றிக்காட்டியதுதான் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நாற்பது ஆண்டு காலச் சாதனை.

# வேட்டியில் இத்தனை வகைகளா?



தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலும் இருக்கின்றன ராம்ராஜ் காட்டன் ஷோரூம்கள். இதுதவிர அனைத்து முன்னணி ஜவுளி நிறுவனங்களிலும் ராம்ராஜ் தயாரிப்புகளை வாங்கலாம். எங்கும் போய் வெறுமனே, "ஒரு வேட்டி கொடுங்க" என்று கேட்டு எதையோ வாங்கிக்கொண்டு வந்துவிட முடியாது. "எந்த வகை வேட்டி வேண்டும்? எதற்காக இந்த வேட்டி தேவைப்படுகிறது?" போன்ற கேள்விகளை ஊழியர் உங்களிடம் கேட்பார். நீங்கள் பதிலளிப்பதைப் பொறுத்து, அதற்குப் பொருத்தமான வேட்டிகளைக் காட்டுவார். ஏனெனில், வேட்டியிலும் உண்டு அத்தனை வெரைட்டிகள்!

ஒவ்வொரு தேவைக்கும், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பொருந்துகிற மாதிரியான பிரத்யேக வேட்டி ரகங்களை உருவாக்கித் தமிழ் மக்களின் மனம் கவர்ந்திருக்கிறது ராம்ராஜ் காட்டன். வெள்ளை நிறத்தில் வேட்டி, அதற்குப் பொருத்தமாக வெள்ளை சட்டை, பனியன், வேட்டிக்கு ஏற்ற வெள்ளை உள்ளாடை, கர்ச்சீப் என்று அனைத்தும் தரமாக இருப்பதால், அரசியல்வாதிகள் முதல் மணமகன்கள் வரை 'ராம்ராஜ்யம்'தான்.

இடுப்பில் வேட்டி நிற்காது என்ற பயத்தில் இளைஞர்கள் அணியத் தயங்கினார்கள். அத்துடன், செல்போன் மற்றும் மணிபர்ஸை எங்கே வைப்பது என்ற தயக்கமும் இருந்தது. இப்படிப்பட்ட இளம் தலைமுறையினருக்காக 'ஜெனெக்ஸ்ட் வெல்க்ரோ பாக்கெட் வேட்டி'களை அறிமுகம் செய்தது ராம்ராஜ். இந்த வேட்டியைக் கட்ட வேண்டியதில்லை. இடுப்பில் வைத்து ஒட்டிக்கொள்ளலாம். இதற்காக வெல்க்ரோ இணைக்கப்பட்டுள்ளது. செல்போன் மற்றும் பர்ஸ் வைக்க பாக்கெட்டும் இந்த வேட்டியில் உண்டு. இடைக்கேற்ற அளவுகளில் தேவைப்பட்டால் பெல்ட் அணிந்துகொள்ள லூப் வசதியும் உண்டு.

'மதிப்பிற்குரியவர்களுக்கு ராம்ராஜ் வேட்டிகள்' என்ற விளம்பரத்தைப் பார்த்து ஒரு சிறுவன் கேட்டான். "பெரியவங்களுக்குத்தான் வேட்டி கிடைக்குது. சின்னப் பசங்களுக்கு வேட்டி இல்லை. அப்ப, நாங்க எல்லாம் மதிப்பிற்குரியவர்கள் இல்லையா?" அந்தக் கேள்வி, குழந்தைகளுக்கான ரெடிமேட் வேட்டியை உருவாக்க வைத்தது.



இன்று ராம்ராஜ் காட்டன் ஷோரூமில் எந்த வயதினருக்கும், எந்தத் தருணத்துக்கும் ஏற்ற வேட்டிகள் கிடைக்கும். பிரமாண்டமான குடும்ப விசேஷங்களில் கலந்துகொள்ள வெள்ளி மற்றும் தங்க ஜரிகை பார்டர் வேட்டிகள், இளைஞர்கள் இடுப்பில் ஒட்டிக்கொள்ள ரெடிமேட் பாக்கெட் வேட்டிகள், இதமான அனுபவத்துக்கு லினன் வேட்டிகள், அரசியல்வாதிகளுக்குத் தங்கள் கட்சியின் கொடியை பார்டர் போட்ட பொலிட்டிகல் வேட்டிகள், பிரார்த்தனை செய்யும் தருணத்தில் அணிய தூய வேட்டிகள், புனித யாத்திரைகளுக்கு வண்ண வண்ண நிறங்களில் வேட்டிகள், தெய்வீக நிகழ்வுகளுக்கு பஞ்சகச்ச வேட்டிகள் என்று சகலமும் கிடைக்கும். பஞ்சகச்ச வேட்டிகளை முறைப்படி அணிவது பலருக்குச் சிரமமாக இருக்கிறது. அவர்களுக்காக ரெடிமேட் பஞ்சகச்ச வேட்டிகளும் கிடைக்கின்றன.

இவை மட்டுமல்லாமல், கோயிலுக்குச் செல்பவர்களுக்காகவே, பிரத்யேகமாக ஜரிகை, மயில்கண் வேட்டிகளைத் தருகிறது ராம்ராஜ் காட்டன். அலுவலகம் மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்குச் செல்ல பிரீமியம் வேட்டிகள் தனியாக உண்டு. விருந்துகள், விழாக்கள், குடும்ப நிகழ்ச்சிகள் போன்ற கொண்டாட்டங்களுக்கு என்று அழகான டிசைன்களில் எம்பிராய்டரி போன்ற வேலைப்பாடுகள் செய்து தயாரிக்கப்படும் மாடர்ன் வேட்டிகள் உண்டு. நோய்த்தொற்றைத் தவிர்க்கும் ஆன்ட்டி–வைரல் வேட்டிகளும் உண்டு.

ராம்ராஜ் காட்டனின் சிறப்பம்சம், காம்போ செட்கள். வேட்டி, சட்டை, கர்ச்சீப் என அனைத்தும் ஒன்றாக பேக்கிங் செய்யப்பட்டு விற்பனையாகிறது. மேட்ச்சிங் தேடி அலைய வேண்டாம். வேட்டியின் பார்டர் கலரில் சட்டையும் சேர்ந்த மேட்ச்சிங் பார்டர் வேட்டிகள், டி–ஷர்ட் மற்றும் வேட்டி காம்போ, குர்தா–வேட்டி காம்போ என்று சகலமும் உண்டு. குழந்தைகளுக்கும் உடுத்த ஏற்றதாக எலாஸ்டிக்குடன் ரெடிமேட் வேட்டி உண்டு. அதற்குப் பொருத்தமாகச் சட்டை மற்றும் குர்தா செட்களும் கிடைக்கும். குர்தா–பஞ்சகச்சம், குர்தா–பைஜாமா ஆகியவையும் உண்டு.

திருமணத்திற்கான வேட்டிகள், ராம்ராஜின் சிறப்புத் தயாரிப்புகள். முகூர்த்த நாளில் மாப்பிள்ளைக்கான கம்பீரத்தோடு கட்டுவதற்கான வேட்டிகள் பலவிதமான வகைகளில் கிடைக்கின்றன. வேட்டிக்கு ஏற்ற சட்டையும் துண்டும் மென்மையான பட்டுத் துணியில் கிடைக்கும். வேட்டியுடன் மேட்ச்சிங் நிறத்தில் சட்டை, அதே நிறத்தில் புடவை என்று ‘கப்புள் காம்போ’வும் கிடைக்கும்.

லினன் பேன்ட் & ஷர்ட்கள், ஃபார்மல் மற்றும் கேஷுவல் ஷர்ட்கள், தைத்துக்கொள்ள ஏற்றதாக காட்டன் மற்றும் லினன் துணிகள் எனக் குடும்பத்தில் எல்லோருக்கும், எல்லாத் தேவைகளுக்குமான ஆடைகளைத் தரும் நிறுவனமாக ராம்ராஜ் காட்டன் உள்ளது.

ஆண்களுக்கான உள்ளாடைகள் போலவே பெண்களுக்கான ‘கோகிலா‘ உள்ளாடைகளையும் ‘ரம்யம்’ என்ற பிராண்ட் பெயரில் சேலைகளையும் உருவாக்கியது. இப்போது சந்தேரி காட்டன், பிரின்டட் காட்டன், கேரளா க்ரீம், செமி சில்க் காட்டன், செமி சில்க் செமி டஸார், செமி கோரா காட்டன் என்று பல மெட்டீரியல்களில் விதவிதமான டிசைன்களில் புடவைகளின் அணிவகுப்பு உள்ளது. எம்பிராய்டரி குர்தி, ஜாக்கெட் குர்தி, பிரின்டட் குர்தி, ஸ்ட்ரெயிட் கட் குர்தி, அம்பரெல்லா குர்தி என்று குர்திக்களும் உள்ளன. லெக்கின்ஸ் மற்றும் டிரஸ் மெட்டீரியல்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன.

# மதிப்பிற்குரியோர்க்கு...

**– கவிப்பேரரசு வைரமுத்து**

வெண்மையின் ஆடை
நம்மவர் வேட்டி
விடுதலை ஆடை
தென்னவர் வேட்டி

பாட்டன் கட்டிய
பரம்பரை வேட்டி
பழைய தமிழரின்
பண்பாடு வேட்டி

தும்பைப் பூவின்
தூய்நிறம் வேட்டி
நம்பி உடுத்தும்
நல்லுடை வேட்டி

அப்பன் இடுப்பை
ஆண்டது வேட்டி
வெப்ப நிலைக்கு
ஏற்றது வேட்டி

கணிப்பொறித் தலைமுறை
கட்டும் வேட்டி
மணப்பெண் பார்த்து
மயங்கிடும் வேட்டி

மாண்பு மிகுந்தவர்
மனங்கவர் வேட்டி
மாணவர் அணிந்து
மகிழும் வேட்டி

மரியாதை கூட்டும்
மங்கல வேட்டி
மதிப்பிற் குரியோர்க்கு
ராம்ராஜ் வேட்டி



# என்றென்றும் நன்றி!

## – நடிகர் ஜெயராம்



“எனக்கும் ராம்ராஜ் நிறுவனத்திற்குமான பந்தம் 15 ஆண்டுகளுக்கும் மேலானது. எனக்கு இப்போதும் நன்றாக நினைவிருக்கிறது. சென்னை விமான நிலையத்தில் ஒருமுறை ஒருவர் என் தோளில் தட்டிக் கூப்பிட்டார். 'நான் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் உரிமையாளர். என்னுடைய பெயர் நாகராஜன். ராம்ராஜ் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா?' என்று கேட்டார். 'என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள். நான் உடுத்தியிருக்கும் வேட்டியே ராம்ராஜ் தயாரிப்புதான்' என்றேன். 'நீங்கள் வேட்டி உடுத்திச் செல்வதைப் பலமுறை விமான நிலையங்களில் பார்த்திருக்கிறேன். நீங்கள் வேட்டி உடுத்தும் அழகு எனக்கு மிகவும் பிடிக்கும். ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் பிராண்ட் அம்பாசிடராக நீங்கள் வருவீர்களா?' என்று கேட்டார். 'தாராளமாக... வேட்டி நம் பண்பாட்டின் அடையாளம். எனக்கும் வேட்டி அணிவது மிகவும் பிடிக்கும்' என்றேன். அப்படித்தான் ஆரம்பமானது பயணம்.

நான் சினிமாவுக்கு வந்து 23 வருடங்கள் ஆகின்றன. 200 படங்களுக்கு மேல் நடித்திருக்கிறேன். இந்தியாவிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி, எத்தனையோ நிகழ்ச்சிகளுக்குப் போயிருக்கிறேன். உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ, அங்கு செல்லும்போதெல்லாம், 'சல்யூட்... ராம்ராஜுக்கு சல்யூட்' என்று சொல்கிறார்கள். சிறுவர்கள் கூட 'சல்யூட் ராம்ராஜுக்கு சல்யூட்' என்று சொல்வது பெரிய சந்தோஷம்.

திரு. நாகராஜன் அவர்களிடம் 'நீங்கள் உருவாக்கும் வேட்டி, சட்டை அனைத்தும் வெள்ளை நிறம். ஆனால் அதைவிட வெண்மையான நிறம் உங்கள் மனது' என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. 2016–ம் ஆண்டு கேரளாவில் பெருவெள்ளம். வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. பலருக்கும் வீடு இல்லை. மாற்றுவதற்கு உடை இல்லை. இப்படி லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். விடிவதற்குள் அவ்வளவு பேரழிவு. அதிகாலையில் எனக்கு முதல் அழைப்பு நாகராஜன் சாரிடமிருந்து வந்தது. 'என்ன ஆச்சு ஜெயராம்?' என்று கேட்டார். 'கேரளாவே மூழ்கிவிட்டது. லட்சக்கணக்கான மக்கள் தெருவில் நிற்கிறார்கள். உடுத்துவதற்கு வேட்டி இல்லை சார்' என்றேன். உடனடியாக, 'ஓணம் பண்டிகைக்காகத் தயாரித்த ஆடைகள் குடோனில் எவ்வளவு உள்ளதோ, அவ்வளவையும் அனுப்பி வைக்கிறேன்' என்றார். சில மணி நேரங்களில் 10, 12 லாரிகள் முழுவதும் உடைகளை அனுப்பி வைத்தார். அவை எத்தனை கோடி வரும் என்று எனக்கே தெரியாது. அவற்றை எடுத்துக்கொண்டு எல்லா இடங்களுக்கும் போய் மக்களுக்குக் கொடுத்தேன். நான் பார்த்தபோது அதில் 5 ஆயிரம் ரூபாய் வேட்டி இருந்தது. பட்டு வேட்டி இருந்தது. 3 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சட்டைகள் இருந்தன. எதையுமே பார்க்காமல் அப்படியே எடுத்துக் கொடுத்தார். அது தான் மிகப்பெரிய மனசு. 'உங்களைப் போட்டியாகக் கருதுபவர்கள்கூட எட்டிப்பிடிக்க முடியாத உயரத்தில் இருப்பதற்கு உங்கள் நல்ல மனசுதான் காரணம்' என்று நானே அவரிடம் அடிக்கடி சொல்வதுண்டு.

பெருமைமிக்க ஒரு நிறுவனத்துடன் 15 ஆண்டுகளுக்கும் மேலாக பிராண்ட் அம்பாசிடராக இருப்பது எவ்வளவு பெரிய பெருமை. என்றென்றும் நன்றி. ராம்ராஜ் குடும்பத்தில் ஓர் அங்கமாக என்னை உணர்கிறேன்.

# மேக் இன் இந்தியா!



சீன அதிபர் ஜி ஜின்பிங் சமீபத்தில் இந்தியா வந்தபோது அவரை டெல்லியில் வைத்து சந்திக்காமல், சென்னைக்கு அருகே மாமல்லபுரத்தில் சந்தித்தார் பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி. அப்போது நம் தென்னிந்தியப் பாரம்பரியமான வேட்டி உடுத்தியிருந்தார் பிரதமர். “ராம்ராஜ் தயாரிப்பான வெல்க்ரோ வேட்டியை பிரதமர் தேர்வு செய்து உடுத்தியது பெருமையாக இருக்கிறது” என்று பல நண்பர்கள் என்னிடம் குறிப்பிட்டுப் பாராட்டினர்.

சென்னையில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் நடைபெற்றபோது, ராம்ராஜ் அறிமுகம் செய்த செஸ் டிசைன் பார்டர் கொண்ட ‘தம்பி’ வேட்டியை அணிந்தபடி மேடையில் தோன்றினார் பிரதமர்.

‘மேக் இன் இந்தியா’ திட்டத்தை ஊக்குவிக்க, நமது பிரதமர், ‘ஜீரோ டிஃபெக்ட்... ஜீரோ எஃபெக்ட்’ எனும் முழக்கத்தை முன்வைத்தார். தரத்தில் குறையாத ஜீரோ டிஃபெக்டும், சுற்றுச்சூழலுக்கு தீங்கு தராத ஜீரோ எஃபெக்டும் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்தால், ‘மேட் இன் இந்தியா’ என்று கம்பீரமாக முத்திரையிட்டு விற்பனை செய்ய முடியும் என்றார் அவர். “நமது சூழலுக்குக் கேடு விளைவிக்காமல், நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பையும் திறன் மேம்பாட்டையும் தரும் தொழில்கள் இங்கு தேவை” என்றார் பிரதமர். ராம்ராஜ் நிறுவனம் இந்தச் சிந்தனைகளையே நடைமுறைப்படுத்தி வருகிறது.

வெளிநாட்டில் தயாரானது என்றால் ‘விலை கூடுதலாக இருந்தாலும் தரம் நன்றாக இருக்கும், நீடித்து உழைக்கும்’ என்ற நம்பிக்கை பலருக்கு இருந்தது. உடைகளில் ‘உயர்ந்த தரம்’ என்று நாம் வாங்கும் பல வெளிநாட்டுத் தயாரிப்புகள், நம் நாட்டில்தான் உற்பத்தியாகின்றன என்கிற உண்மை பலருக்குத் தெரிவதில்லை. திருப்பூரில் சர்வதேசத் தரத்தில் உற்பத்தி செய்யப்படும் உடைகள், ‘மேட் இன் அமெரிக்கா’, ‘மேட் இன் இங்கிலாந்து’ என்று வெறும் லேபிள் மட்டும் ஒட்டி நம்மிடமே விற்பனைக்கு வருகின்றன. திருப்பூரில் நம் சகோதரர்கள் தயாரித்த பொருளையே, சர்வதேசத் தரம் என்று சொல்லி அதிக விலைகொடுத்து வாங்குகிறார்கள் பலர்.

இந்த நிலையை மாற்றி, ‘இந்தியாவில் தயாராகும் உடைகள் எந்தவிதத்திலும் வெளிநாட்டு உடைகளுக்குக் குறைந்தவை அல்ல’ என்பதை, தரமான உடைகளைத் தயாரிப்பதன் மூலம் நிரூபித்துக் காட்டுகிறது ராம்ராஜ் காட்டன். ‘தரம் நிரந்தரம் என்றால், எங்கள் ஆதரவும் நிரந்தரம்’ என்று தரத்தின் பக்கம் நிற்கின்றனர் மக்கள்.

நம் கிராமப்புற நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், நம் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் நோக்கத்திலும் தரமான வேட்டி மற்றும் சட்டைகளைத் தயாரிக்கிறது ராம்ராஜ் காட்டன் நிறுவனம். ஏற்றுமதிக்கு ஏற்ற தரமான உடைகளைத் தயாரிக்கும் வசதிகள்தான் திருப்பூரின் தனித்துவம். இந்த வசதிகளைப் பயன்படுத்தி இப்போது உள்நாட்டிலேயே சர்வதேசத் தரத்தோடு நவீன ரக ஆடைகளையும் தயாரிக்கிறது ராம்ராஜ் காட்டன். ஆண்களுக்கான பனியன்கள், டிராயர்கள், ப்ரீப்ஸ், ஷார்ட்ஸ், ட்ராக் பேன்ட்ஸ், டி–ஷர்ட்ஸ் மற்றும் பெண்களுக்கு சிம்மீஸ், பேன்டீஸ், லெக்கிங்ஸ், ஸ்லிப்ஸ் என எல்லாமே சர்வதேசத் தரத்தில் இங்கு தயாராகின்றன. ராம்ராஜ் நிறுவனத்தில் ஒரே நாளில் 2 லட்சம் உள்ளாடைகள் தயாரிக்கும் வசதி உள்ளது.

சுதேசித் தயாரிப்புகளைப் போற்றுவோம். உள்நாட்டில் தரமாகத் தயாரிக்கப்படும் உடைகளை அணிவோம். ●

# பிசினஸ்

**ஒ**ரு வேட்டி நிறுவனத்துக்கு வேலை தேடிப் போனேன். மார்க்கெட்டிங் வேலை கொடுத்தார்கள். 'ஆந்திராவுக்குப் போய் வேட்டி ஆர்டர் எடுத்து வாருங்கள்' என்பதுதான் அங்கு எனக்குச் சொல்லப்பட்ட முதல் வேலை. அதுவரை எனக்கு ஆந்திரா எந்தத் திசை என்றுகூடத் தெரியாது. தெலுங்கில் பேசினால்தான் அங்கே முகம் பார்த்து சிரிக்கவே செய்வார்கள். எனக்குத் தெலுங்கும் தெரியாது. மார்க்கெட்டிங் தொழிலுக்கு அடிப்படையான தேவை, பேச்சுதான். தட்டுத் தடுமாறி தெலுங்கு கற்றுக்கொண்டேன்.

சின்ன வயதும் லட்சிய மனமும்தான் மூலதனம். முட்டி மோதிப் பார்த்து விடுவோம் என ஆந்திரா முழுவதும் சுற்றிச் சுழன்று ஆர்டர் எடுத்தேன். அதுவரை 18 ஆயிரம் ரூபாய் ஆர்டர் எடுத்ததே சாதனையாக இருந்த நேரத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கு ஆர்டர் எடுத்துக்கொண்டு வந்தேன். அதன்பின் நிறுவனத்தின் செல்லப் பிள்ளை நான்தான். அப்போதுதான் ஓர் உண்மை புரிந்தது... 'ஒன்றுமே தெரியாமல் ஒரு தொழிலில் இறங்கினாலும், ஈடுபாடும் உழைப்பும் இருந்தால் எல்லாம் கைவசம் வந்து விடும்!'




**வா**ய்ப்பு எல்லோருக்கும் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன்படுத்துவோரே சாதனையாளர் ஆகிறார்கள். 'பிசினஸ் செய்ய வேண்டும்' என்ற எண்ணம் இருந்தால் போதும்... அதுவே நம் கைப்பிடித்து வழிநடத்தும். வாய்ப்புகளைப் பயன்படுத்தும் சூழலையும் உருவாக்கிக் கொடுக்கும். தவறவிட்ட வாய்ப்பை நினைத்து வருத்தப்பட வேண்டாம். இதை விட்டுவிட்டீர்களா? நிச்சயம் இன்னொன்று இருக்கும். அதைத் தேடிக் கண்டுபிடியுங்கள்!

**அ**மைச்சர் ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அவர் வீட்டுக்கு ஜெர்மனி நாட்டிலிருந்து விருந்தினர்கள் வந்திருந்தனர். அவர்களிடம் என்னை அறிமுகம் செய்தனர். அந்த வெளிநாட்டினருக்கு வேட்டி பற்றித் தெரியவில்லை. எனக்குக் கிடைத்த வாய்ப்பில் வேட்டியின் சிறப்புகளையும், தமிழர்களின் உடைப் பாரம்பரியத்தையும் விளக்கினேன். தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் செய்த புதுமைகளை விவரித்தேன். அந்த விருந்தினர்களில் ஒருவருக்கு வேட்டி கட்ட வேண்டும் என்ற ஆர்வம் வந்துவிட்டது. அந்த நாளை என் வெற்றி தினமாகக் கருதி மகிழ்ந்தேன்.

உடன் வந்திருந்த நண்பர், "உங்கள் பத்து நிமிட மார்க்கெட்டிங் காரணமாக அவர் ஒரு வேட்டி வாங்கலாம். மாதா மாதம் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வேட்டிகளை விற்கும் நிறுவனத்தின் தலைவர், ஒரு வேட்டியை விற்பதற்குப் பத்து நிமிடம் செலவழிப்பது தேவையா?" என்று கேட்டார். "இன்று நான் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வேட்டிகளை விற்பனை செய்ய, இதுபோன்ற சின்னச்சின்ன வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தியதுதான் காரணம்" என்று விளக்கினேன்.

# மந்திரங்கள்!

– கே.ஆர்.நாகராஜன்



“**ரா**ம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் முதல் தொழிலாளி நான்தான்” என எல்லா இடங்களிலும் பெருமையாகச் சொல்வேன். 40 வருடங்களுக்கு முன்பு மட்டும் நான் தொழிலாளி இல்லை; இன்றைக்கும் என்னைத் தொழிலாளியாகவே நினைத்துக்கொள்கிறேன். அதனால்தான் காலையில் தூங்கி எழுந்ததிலிருந்து, இரவு தூங்கப் போகும்வரை தொழில் பற்றிச் சிந்தித்து என்னால் உழைக்க முடிகிறது. கடந்து வந்த பாதையை மறக்காமல் இருந்தால்தான், எதிர்காலப் பயணத்துக்கான பாதை தெரியும்.

**ப**ள்ளி மாணவனாக இருந்தபோது, ‘ஜவுளி வியாபாரம் செய்ய வேண்டும்’ என்ற எண்ணம் மனதில் பதிந்தது. ஆனால், விதி என்னை ஒரு மெஷினரி நிறுவனத்தில் வேலை செய்ய வைத்தது. மேகலா மணி என்ற எங்கள் சொந்தக்காரரின் நிறுவனம் அது. என்னை விதி இங்கு சேர்த்ததற்கு ஏதோ காரணம் இருக்கும் என நம்பினேன். அந்தக் காரணம் பிறகு புரிந்தது. மனிதர்களைக் கையாளும் வித்தையை அங்குதான் கற்றேன். ஓர் அலுவலகம் எப்படி இருக்க வேண்டும், ஊழியர்களை எப்படி வேலை வாங்குவது, நாம் எப்படி வேலை பார்ப்பது என அவர்தான் நிறைய சொல்லிக் கொடுத்தார். திசை மாறி எங்கோ சென்றாலும், அங்கேயும் நமக்கானதைக் கற்றுக்கொள்ள முடியும் என்று நம்புங்கள்.

**ரா**ம்ராஜ் காட்டன் நிறுவனம் ஆரம்பித்த புதிது. ஆர்டர் எடுப்பதற்காக ஜவுளிக்கடைகளுக்குச் சென்றேன். ஒரு கடை முதலாளி என்னைப் பார்த்ததும் நான் வேலை பார்த்த பழைய நிறுவனத்தின் பெயரில் ‘ஆர்டர்’ போட்டுக் கொடுத்தார். “இந்த ஆர்டரை அந்த நிறுவனத்திற்குக் கொடுத்துவிடுகிறேன். இப்போது நான் சொந்த நிறுவனம் ஆரம்பித்து பிராண்ட் பெயரில் முதல்முறையாக வேட்டி விற்பனை செய்கிறேன். அடுத்தமுறை ஆர்டர் கொடுக்கும்போது என் நிறுவனத்துக்குக் கொடுங்கள்” என்று சொன்னேன். அவருக்கு நான் பேசிய உண்மை பிடித்தது. அதே அளவு புதிய ஆர்டரை அப்போதே எனக்கும் தந்தார். உண்மைக்கு எல்லா இடங்களிலும் மதிப்பு உண்டு.

**ஆ**ந்திராவில் ஒரு ஜவுளிக்கடை முதலாளி. எத்தனை முறை போனாலும் ஆர்டர் தரவே மாட்டார். இருந்தாலும், சளைக்காமல் அவர் கடைக்குப் போவேன். அவரைப் பார்த்து நலம் விசாரித்துவிட்டு ஒரு வணக்கம் சொல்லாமல் வரவே மாட்டேன். ஒருமுறை அவர் கோபத்தில் கடுமையாகத் திட்டி விட்டார். “ஏன்யா, உனக்கெல்லாம் ஒரு தடவை சொன்னா புரியாதா? வாட்ச்மேன் கிட்ட சொல்லி, உன்னை உள்ளே விடக்கூடாதுன்னு சொன்னாதான் தொந்தரவு பண்றதை நிறுத்துவியா?” என்று ஒருமையில் பேசிவிட்டார்.

நான் அவரிடம் பதிலுக்குக் கோபத்தைக் காண்பிக்கவில்லை. மிகப் பொறுமையாக அவரிடம் பேசினேன். “ஐயா, உங்களுக்கு வந்து ஒரு வணக்கம் சொல்லிவிட்டுப் போனால் எனக்கு நல்ல ராசியாக இருக்கிறது. மற்ற கடைகளில் நிறைய ஆர்டர்கள் கிடைக்குது. நீங்க எனக்கு ஆர்டர் தரவே இல்லைன்னாலும் பரவாயில்லை. நான் வந்து வணக்கம் சொல்வதை மட்டும் தயவுசெய்து தடுக்காதீங்க” என்றேன். அவர் அப்படியே கலங்கிவிட்டார். அதற்குப் பிறகு எங்கள் விற்பனையாளர் ஆனவர், கடந்த 40 வருடங்களாக எங்கள் தயாரிப்புகளை விற்றுவருகிறார். பணிவு எப்போதும் தோற்பதில்லை.

ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன், தன்னம்பிக்கை உரம் ஊட்டும் அபாரமான பேச்சாளர். சென்னை ஐ.ஐ.டி, கோவை பி.எஸ்.ஜி குரூப் கல்லூரிகள் எனப் பல கல்வி நிலையங்களில் நூற்றுக்கணக்கான உரைகளை நிகழ்த்தியுள்ளார். அவர் வாழ்க்கைப்பாடமாகச் சொல்லும் பொன்மொழிகள் சில:

❖ மாதா, பிதா, குரு, தெய்வம், அரசாங்கம் என எனக்கு ஐந்து சாமிகள். பயமில்லாமல் ஒரு நாட்டில் வாழ முடிகிறது என்றால், அதற்கு அரசாங்கம்தானே காரணம். அதனால்தான் கால் காசு மிச்சம் வைக்காமல் சந்தோஷமாக வரி கட்டி விடுவேன்.

❖ எல்லா பெரிய முயற்சிகளுக்குமே தளராத உழைப்பும், உறுதியான திட்டமும், அதை நேர்மையான வழியில் அடையும் தாகமும் அவசியம். எந்தச் சூழலிலும் இதில் உறுதியாக இருப்பவர்களே வெற்றியாளர்கள் ஆகிறார்கள்.

❖ நாம் எடுக்கிற முடிவுகள்தான் நம் வாழ்வைத் தீர்மானிக்கின்றன. சிலர் முடிவுகளை எடுக்கத் தெரியாமல் தடுமாறுகிறார்கள்; சிலர் விளைவுகளை நினைத்துத் தயங்குகிறார்கள்; சிலர் தள்ளிப்போட்டு ஏமாறுகிறார்கள். சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்து, முயற்சிகளைத் தொடர்வதில்தான் நம் ஆன்ம பலம் அடங்கியுள்ளது.

❖ 'எனக்குப் பெயர் வேண்டும்', 'பணம் வேண்டும்', 'புகழ் வேண்டும்' என்பதெல்லாம் 'கனவு' கிடையாது. உயர்ந்த கனவுகளுக்கு உன்னதமான இலக்குகள் இருக்க வேண்டும். தானும் உயர்ந்து, தன்னைச் சுற்றி உள்ளவர்களையும் உயர்த்தும் வல்லமை உடையதுதான் வலிமையான கனவாகும்.

❖ பாடங்களைத் தாண்டி மனிதர்களையும் படியுங்கள். ஒவ்வொரு மனிதரிடமும் ஒரு பாடம் கிடைக்கும். அதையெல்லாம் கற்றுக்கொள்ளாமல் தொழிலிலோ, நிர்வாகத்திலோ வெற்றி சாத்தியமில்லை.

❖ 'இத்தனை தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறேன்' என்கிற எதிர்மறையான சிந்தனை, தனிப்பட்ட மனிதனை முதன்மையாக்கி, 'அவர் இல்லையென்றால் எதுவும் இல்லை' என்கிற அதீத நம்பிக்கையைக் கொடுத்துவிடும். 'இத்தனை தொழிலாளர்களின் கூட்டு உழைப்பு நம்முடைய வளர்ச்சிக்கு துணையாக இருக்கிறது' என்கிற நேர்மறையான சிந்தனை, அடக்கத்தையும் பணிவையும் தரும்.

❖ 'எப்படியாவது' தொழிலில் ஜெயித்துவிட வேண்டும் என்கிற வேட்கைக்கும், 'இப்படித்தான்' நேர்மையாகத் தொழில் செய்து ஜெயிக்க வேண்டும் என்கிற கொள்கைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. 40 ஆண்டு காலத் தொழில் முயற்சியும், அனுபவமும் எனக்கு உணர்த்தியது இதைத்தான்.

❖ லாப – நஷ்டக் கணக்காக இல்லாமல், பல குடும்பங்களின் மனநிறைவான வாழ்விற்கு தொழில் முயற்சி பயன்பட வேண்டும் என்கிற எண்ணம் மனதில் உதிக்கத் தொடங்கினால், வளர்ச்சி நிச்சயம். வேகமான வளர்ச்சியைவிட, நிலையான வளர்ச்சியே எந்த ஒரு தொழிலுக்கும் ஆணிவேர்.

❖ மகிழ்ச்சியாக இருங்கள். நீங்கள் இருக்கும் சூழலையும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் வாய்ப்புகள் கண்ணுக்குத் தெரியும். உங்கள் பலம், பலவீனம் அறிந்து திட்டமிட்டுச் செயல்படுங்கள். ஜெயிக்க முடியும்.

❖ நாம் யாரையோ ஜெயிக்க வேண்டியதில்லை. நம்மை ஜெயித்தால் போதும். 'நேற்றைவிட இன்று வளர்ந்திருக்கிறோமா, நேற்றைவிட இன்று மகிழ்ச்சியாக இருக்கிறோமா, நேற்றைவிட இன்று அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடிந்ததா' என்று நினைத்தால் போதும். பிசினஸில் வளர்ச்சி தானாக வரும். ●



# ராம்ராஜ் பொன்மொழிகள்!

# ராம்ராஜ்–ன் 40 ஆண்டுகள் பயணத்தில் சமுதாயப் பணிகள்



அருள் துணையாகிய அருள் தந்தை வேதாத்திரி மகரிஷியுடன்



அருள்தந்தை நூற்றாண்டு விழாவில் அன்றைய தமிழக முதல்வருடன்



திருப்பூர் கம்பன் கழகம் துவக்க விழாவில் நினைவில் வாழும் குடியரசு தலைவர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்களுடன்




சேலத்தில் நடைபெற்ற நெசவாளர் பொங்கல் விழா




வனம் இந்தியா பவுண்டேஷன் சமூகப் பணியில் துணை நிற்க
ரூபாய் 75 லட்சம் மதிப்புடைய பசுமை ரதம் ராம்ராஜ் காட்டன் சார்பாக வழங்கப்பட்டது



தமிழக முதல்வரிடம் கொரோனா நிதியாக ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டது



உலக சமுதாய சேவா சங்கம் சார்பாக ரூபாய் 2 கோடி தமிழக முதல்வரிடம் கொரோனா நிதி வழங்கப்பட்டது

# ராம்ராஜ்-ன் 40 ஆண்டுகள் பயணத்தில் சமுதாயப் பணிகள்




இந்து தமிழ் நாளிதழ் உடன் இணைந்து நடைபெற்ற விழாவில் தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பாசிரியர்களுடன்




இந்தியா முழுவதிலிருந்தும் பாராட்டு பெற்ற ராம்ராஜ் கொண்டாடிய காந்திய வேட்டி நூற்றாண்டு விழா




சர்வதேச யோகா தின விழாவில் மத்திய அமைச்சருடன்



கல்விச் சேவையில் அகரம் பவுண்டேஷன் நிறுவனர்
நடிகர் சிவக்குமார் மற்றும் சூர்யாவுடன்



மகுடம் விருது வழங்கும் விழாவில் தெலுங்கானா கவர்னர்
தமிழிசை சௌந்தர்ராஜன் அவர்களுடன்




திருப்பூர் புத்தகத் திருவிழாவில் தலைமையுரை ஆற்றிய போது

# ராம்ராஜ்–ன் 40 ஆண்டுகள் பயணத்தில் சமுதாயப் பணிகள்



சீன பிரதமருடன் பாரத பிரதமர் பாரம்பரிய உடையில்

## வணக்கம் சென்னை



44 வது சதுரங்க விளையாட்டை பாரம்பரிய உடையில்
துவக்கி வைத்த மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கும்,
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும்,
தமிழக நெசவாளர்களின் சார்பாகவும், தமிழக மக்களின்
சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.




10,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ரூ. 1000 கோடிக்கான
தொழில் முதலீட்டு ஒப்பந்தத்தில் தமிழக முதல்வருடன்



சதுரங்க வேட்டியை அறிமுகப்படுத்திய தமிழக முதல்வருடன்



India's Most Attractive Brands - 2018

India's
Most Attractive
Brands
2021


Ranks

RAMRAJ

As India's Most Attractive
Dhoti Brand
in a study covering 5000 brands
across 16 cities

N. Chandramouli
CEO
TRA Research

TRA
COMNISCIENT



Power of Desire

TRA's
Most Desired
Brands
2020
India Study

ranks

RAMRAJ

India's Most
Desired Brand

in the category of

Dhotis

N. Chandramouli
CEO
TRA Research

TRA
COMNISCIENT



THE
BRAND TRUST
REPORT
India Study 2021
Ranks
RAMRAJ
India's Most Trusted
Dhotis Brand
in a study covering 9000
brands across 16 cities.

THE
BRAND TRUST
REPORT
India Study 2019
Power of Trust

TRA

N. Chandramouli
CEO
Trust Research Advisory

COMNISCIENT
Group initiative



# வெற்றி சொல்லும் ஷோரூம்கள்!

சர்வதேச பிராண்ட்களான மேற்கத்திய உடைகளை விற்பனை செய்வதற்குத்தான் முக்கிய நகரங்களில் பிரத்யேக ஏர்–கண்டிஷன் ஷோரூம்கள் திறப்பது வழக்கம். இந்த வழக்கத்தை மாற்றி, நமது பாரம்பரிய உடையான வேட்டிக்கு பிரத்யேக ஷோரூம்களைத் திறந்து சாதனை படைத்தது ராம்ராஜ் காட்டன் நிறுவனம். இன்று தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, கேரளா, கர்நாடகம் என்று அனைத்து தென்னிந்திய மாநிலங்களின் முக்கிய நகரங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட பிரத்யேக ராம்ராஜ் ஷோரூம்கள் பளிச்சிடுகின்றன. ஜவுளிக்கடைகளில் வேட்டியை மறைவான ஓர் இடத்தில் வைத்து விற்றநிலையை மாற்றி, வெண்மைக்கென்றே தனி ஷோரூம் உருவானது அந்த வேட்டிக்கான வெற்றி. வேட்டிக்கு மக்களிடம் உயர்வு தேடித் தந்து, அதை மதிப்பிற்குரியவர்களின் உடையாக மாற்றிய வளர்ச்சி இது.

'வெளிநாட்டு பிராண்ட்கள்தான் தரமானவை' என்கிற கருத்து சிலரால் இங்கு உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதை அவர்கள் நம்புகிறார்கள். அந்த எண்ணைத்தை மாற்றி 'நம் நாட்டு பிராண்ட்களின் தரத்தோடு எதுவும் நெருங்க முடியாது' என்கிற நிலையை உருவாக்குவதே ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் தாரக மந்திரம்.

'இந்தியாவில் தயாராகும் உடைகள் எந்தவிதத்திலும் வெளிநாட்டு உடைகளுக்குக் குறைந்தவை அல்ல' என்பதை, தரமான உடைகளைத் தயாரிப்பதன் மூலம் நிரூபித்துக் காட்டுகிறது ராம்ராஜ் காட்டன். 'தரம் நிரந்தரம் என்றால், எங்கள் ஆதரவும் நிரந்தரம்' என்று தரத்தின் பக்கம் நிற்கின்றனர் மக்கள். ராம்ராஜ் காட்டன் நிறுவனம் உற்பத்தி செய்கிற ஆடைகளில், 'மேட் இன் இந்தியா' என்று பெருமிதமாகக் குறிப்பிடுகிறோம். சுதேசி தயாரிப்புகளின் உயர்தரத்திற்கு உரிய விலையைக் கொடுத்து மக்கள் மகிழ்ச்சியாக வாங்குகிறார்கள்.

ஒவ்வொரு நகரிலும் ராம்ராஜ் காட்டன் ஷோரூம் திறப்பு நிகழ்வானது, ஒரு மக்கள் திருவிழாவாகவே நடைபெறும். மனவளக்கலை மன்ற அறக்கட்டளையுடன் இணைந்து, மக்களுக்கு நற்சிந்தனைகளை வழங்கும் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். சொல்வேந்தர் சுகிசிவம் போன்ற ஆன்றோர்கள், குடும்ப நலனுக்கு உதவும் அனுபவ உரைகளை வழங்குவார்கள். பயனுள்ள தகவல்கள் அடங்கிய நூல்கள் பரிசுப்பொருளாக மக்களுக்கு வழங்கப்படும்.

திறப்பு விழாவுக்கு அந்தப் பகுதியில் இருக்கும் ஆன்றோர்களும் சான்றோர்களும் வந்திருந்து, நம் பாரம்பரிய உடைகளின் விற்பனை சிறக்க வாழ்த்துவார்கள். காஞ்சிபுரத்தில் ராம்ராஜ் காட்டன் ஷோரூம் திறக்கப்பட்டபோது, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் வருகை தந்து, ஆசி வழங்கிச் சிறப்பித்தார். ●




# முன்னேறலாம் வாருங்கள்!

ஐ.ஐ.டி உள்ளிட்ட புகழ்பெற்ற கல்லூரி மாணவர்கள் மத்தியிலும், மேலாண்மை மற்றும் பிசினஸ் நிறுவனங்களிலும், தொழில் வர்த்தக அரங்குகள் போன்ற இடங்களில் இளம் தொழில் முனைவோர் மத்தியிலும் நூற்றுக்கணக்கான உரைகளை நிகழ்த்தியுள்ளார், ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன். உத்வேகம் தரும் அவரின் உரைகள், பலரையும் தொழில் முனைவோராக மாற்றியுள்ளன. எந்தக் கல்லூரியிலும் சேர்ந்து படிக்காமல் தன் உழைப்பால் முன்னேறிய அவரின் அனுபவங்கள், எந்த நிர்வாகவியல் கல்லூரியிலும் கிடைக்காத உயரிய பாடம். அவர் உரைகளிலிருந்து சில துளிகள்:

● தொழில் முனைவோர் இன்று முதலீடு செய்துவிட்டு நாளையே லாபமடைய நினைக்கக்கூடாது. நேர்மையாக இருங்கள். படிப்படியாக முன்னேற முடியும் என நம்புங்கள். திட்டமிட்டுச் செயல்படுங்கள். உறுதியாக வெல்லலாம். நம்முடைய மண்ணில் எதையெல்லாம் மறந்துவிட்டோமே, அந்தத் தொழில்களைத் திரும்பக் கொண்டு வாருங்கள். நிச்சயம் வரவேற்பு கிடைக்கும்.

● எதைச் செய்தாலும் அதுபற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களிடம் கேட்டு அறிவது பெரிதல்ல, நாமே தேடி அறிந்துகொள்ள வேண்டும். அடுத்தவரைத் தோற்கடித்துவிட்டுப் பெறுவது வெற்றியல்ல. அனைவரையும் ஜெயிக்க வைத்து நாமும் ஜெயிப்பது தான், உண்மையான வெற்றி. லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாதீர்கள். தொழிலை நன்றாகச் செய்தால், லாபம் தானாக வரும்.

● ஒருவரின் வெற்றியிலிருந்து கற்றுக்கொள்வதைவிட, தோல்வியிலிருந்து அதிகம் கற்றுக்கொள்ள முடியும். ஆந்திர மாநிலத்தின் விஜயவாடா நகரில் ஒரு சிறிய உணவகம் இருந்தது. சுவையான உணவகம் என்பதால் விலை சற்றுக் கூடுதலாகவே இருக்கும். இருந்தாலும் எப்போதும் கூட்டம் இருக்கும். இளம் வயதில் ஆந்திரா போகும்போது அங்கு சாப்பிடுவேன். ஆரம்பத்தில் நடந்து சென்று உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த நான் விரைவிலேயே ஆட்டோ, வாடகை கார் என்று நேரத்தை மிச்சம் பிடிக்கச் செலவு செய்யும் அளவுக்கு வளர்ந்துவிட்டேன். ஆனால், அந்தக் கடை வளரவே

இல்லை. ஒரு கட்டத்தில் அந்தக் கடையை நிரந்தரமாக மூடிவிட்டார்கள்.

அனைவரும் தேடிப்போய் அதிக விலை கொடுத்து சாப்பிடும் அளவுக்கு சுவையாகச் சமைக்கத் தெரிந்த ஒருவரால் நடத்தப்பட்ட உணவகம், பெரிய அளவில் வளராமல் போனாலும் பரவாயில்லை. இழுத்து மூடும் நிலைமைக்கு ஏன் வந்தது என்பதை அறிந்துகொள்ள நினைத்தேன். விசாரித்தபோது, அதன் உரிமையாளர் குடிப்பழக்கத்துக்கு அடிமையானதாகத் தெரிந்தது. கடைக்கு திடீர் திடீரென்று விடுமுறை விட்டதாலும், கவனம் சிதறி உணவின் தரத்தைக் குறைத்ததாலும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டிருக்கிறார். வேறு வழியின்றிக் கடையை நிரந்தரமாக மூட நேர்ந்தது.

‘உணவகத்தைச் சரியாக நிர்வாகம் செய்யாமல் போனதே, அவர் தோல்விக்குக் காரணம்’ என்று சொன்னார்கள். ஆனால், ‘தனி மனிதனாக அவர் தன்னைச் சரியாக நிர்வாகம் செய்துகொள்ளாமல் போனதே காரணம்’ என்று நான் சொல்வேன். ஒருவர் தன்னைச் சரி செய்துகொள்வதிலிருந்து தொடங்குகிறது ஒரு நல்ல நிர்வாகம்.

● நிகழ்காலத் தேவையறிந்தும், வருங்காலத் தேவைகளை உணர்ந்தும் நம் பணிகளை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். நிர்வாகம் என்பதை வேலை, நிறுவனம், வியாபாரம் என்று சுருக்கிக்கொள்ள வேண்டியதில்லை. ஒவ்வொரு செயலுக்கும், நம் மகிழ்ச்சியான வாழ்விற்கும்கூட ‘தனிமனிதரின் கவனம் சிதறாத சிறந்த நிர்வாகம்’ அவசியம்.

● வேலைகளைப் பிரித்துக்கொடுத்து ஊழியர்களிடம் வேலைவாங்குபவர் மட்டும் நல்ல நிர்வாகியாக இருக்க முடியாது. முகவாட்டத்துடன் இருக்கிற ஊழியரை அடையாளம் கண்டு, அவருடைய பிரச்னை என்னவென்று கேட்டு அதைத் தீர்க்க, முடிந்த அளவு உதவி செய்பவரே நல்ல நிர்வாகி.

● எங்கள் நிறுவனத்தில் இளைஞர் ஒருவர் விற்பனைப் பிரதிநிதியாகச் சேர்ந்தார். அவரிடம் கொடுத்த வேலையைக் குறித்த நேரத்திற்குள் அவரால் செய்து முடிக்க முடியவில்லை. அதற்குக் காரணங்களை அவர் அடுக்கியபோது எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. ‘அவரைப் போல் மற்றவர்கள் யாரும் பொறுப்போடு இல்லை’ என்பதே அவரின் ஆதங்கம். வெற்றி பெறும்போது அதற்கு நாம் மட்டுமே பொறுப்பு என்று நினைப்பதும், தோல்வியடையும்போது அதற்கு மற்றவர்கள் எல்லாம் பொறுப்பு என்று நினைப்பதும் தவறு. ‘இவர்கள் எல்லாம் இல்லாமல் போனால் என்னால் வெற்றி அடைந்திருக்க முடியாது’ என்று நினைப்பதும், ‘இந்தத் தவறுக்கு முதல் காரணம் நான்தான். நான் இன்னும் கொஞ்சம் கவனமாக இருந்திருக்க வேண்டும்’ என்று உணர்வதும்தான் வெற்றி பெறுவதற்கான முதல் படி.

‘எல்லோரும் ஏன் இப்படி இருக்கிறார்கள்?’ என்று மற்றவர்களைப் பற்றி நினைப்பதும், ‘நாம் சரியாக இருக்கிறோம்’ என்று நம்புவதும் வளர்ச்சிக்கு உதவாது. நம்மைச் சுற்றி சரியும் இருக்கும்; தவறும் இருக்கும். எது அதிகமாக இருக்கிறதோ, அதில் நமக்குத்தான் அதிக பங்கு இருக்கிறது.

● நாம் உச்சரிக்கிற ஒவ்வொரு வார்த்தைக்கும் சுவை உண்டு. அதில் இனிமை இருக்க முடியும். கசப்பு இருக்க முடியும். உள்ளம் எரிக்கிற காரம் இருக்க முடியும். சமைப்பவர்கள் தாங்கள் சமைத்த உணவின் சுவையை ருசி பார்த்துப் பிறகு பரிமாறுவதைப்போல, நம்மிடம் இருந்து பிறக்கிற ஒவ்வொரு சொல்லின் சுவையையும் நாம் உணர்ந்து பிறகு உச்சரிக்க வேண்டியது அவசியம். பேச்சுக்கலையைச் சரியாகப் பயின்றுவிட்டால், நம் வாழ்வில் மகிழ்ச்சியும் வளர்ச்சியும் பெருகும். ●


RAMRAJ காட்டன்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 7 இதழ் 4

அக்டோபர் 2022

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137




# குரு அருள்!

– கே.ஆர்.நாகராஜன்

ராம்ராஜ் காட்டன், வேட்டிகளுக்காகச் செய்த விளம்பரங்களைவிட 'உறவுகள் மேம்பட' என்ற வாழ்க்கை மொழிகளுக்காகச் செய்த விளம்பரங்கள் அதிகம். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் இந்த வாழ்க்கை நெறிகளை காலண்டர்களாக அச்சிட்டு லட்சக்கணக்கான இல்லங்களுக்குக் கொண்டு சென்று சேர்த்திருக்கிறோம்.

எங்கேனும் நல்லது ஒன்றைக் கண்டால், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று நினைப்பதுதான் நல்ல மன இயல்பு. அதன் அடிப்படையில்தான் என் தனிப்பட்ட வாழ்விலும், 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனத்தின் செயல்பாடுகளிலும் மகரிஷி இடம்பெறுகிறார். இது நம் வாழ்வை வளமாக்கும் நல்லெண்ணத்தின் முதல் படி.

"எண்ணத்தில் கவனமாய் இருங்கள்; ஏனெனில் எண்ணங்கள்தான் சொற்களாகின்றன. சொல்லில் கவனமாய் இருங்கள்; ஏனெனில் சொற்கள்தான் செயல்களாகின்றன. செயலில் கவனமாய் இருங்கள்; ஏனெனில் செயல்கள்தான் பழக்கங்களாகின்றன. பழக்கத்தில் கவனமாய் இருங்கள்; ஏனெனில் பழக்கங்கள்தான் ஒழுக்கங்களாகின்றன. ஒழுக்கத்தில் கவனமாய் இருங்கள்; ஏனெனில் ஒழுக்கம்தான் உங்கள் வாழ்வை வடிவமைக்கின்றது" என்பது மகரிஷியின் தத்துவம்.

என் வாழ்வையும், 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனத்தின் வளர்ச்சியையும் 'மகரிஷிக்கு முன்' – 'மகரிஷிக்குப் பின்' என இரண்டு கட்டங்களாகப் பிரிக்க இயலும். தொழில் என்பது வெறும் 'வரவு, செலவு, லாபம்' என்று புரிந்து வைத்திருந்தேன்.

மகரிஷியைச் சந்தித்தபோது, "நேர்மையாகத் தொழில் செய்யுங்கள்... வளமான எதிர்காலம் கிடைக்கும்" என்று சொன்னார். தினமும் 'மனவளக்கலை' பயிற்சி செய்து, தியானம் செய்து, குரு சொன்னபடி தொழில் செய்ய ஆரம்பித்தேன். அதில் கிடைத்த ஆனந்தத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது.

எங்கள் நிறுவனத்தில் வேலை செய்கிற ஒவ்வொரு ஊழியரும் 'மனவளக்கலை' பயிற்சி எடுத்தவர்கள். 'தரமற்ற பொருளை வாடிக்கையாளர்களிடம் எப்படியாவது தள்ளி விடலாம்' என்ற சிந்தனை எங்கள் ஊழியர்களுக்குக்கூட இன்று கிடையாது.

'நெசவாளர்கள், விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரின் நலன் பாதிக்காத முடிவுகளைத் துணிந்து எடு. இவர்களில் ஒருவரின் நலன் பாதிக்கும் என்றாலும் அந்த முடிவைக் கைவிடு' என்ற தொழில் மந்திரத்தை மகரிஷி எனக்கு சொன்னார். இன்றுவரை அதைக் கடைப்பிடிக்கிறேன். நாம் வாடிக்கையாளர்களுக்கு உண்மையாக இருந்தால், வாடிக்கையாளர்கள் நமக்கு உண்மையாக இருப்பார்கள் என்கிற அடிப்படை உண்மையே இன்று 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வேராக மாறி இருக்கிறது.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவியது உலக சமுதாய சேவா சங்கம். மனவளக்கலை யோகாவைக் கிராம மக்களுக்கு இலவசமாகக் கற்றுக் கொடுக்கிறது இந்த அமைப்பு. உடல்நலனுக்கும் மனவளத்துக்கும் உதவும் இந்தப் பயிற்சியைப் பெற்றால் குடும்பம் அமைதியும் ஆரோக்கியமும் பெறும். இந்த சங்கத்தின் தலைவராக திரு. எஸ்.கே.எம்.மயிலானந்தன் அவர்கள் செயல்படுகிறார். நான் துணைத்தலைவராகச் செயல்படுகிறேன். நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் மனவளக்கலைப் பயிற்சியைக் கொடுத்து, கிராமங்களை வளமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். வேதாத்திரி மகரிஷி நிறுவிய அறிவுத் திருக்கோயில் பணிகளிலும் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன். ●

வாழ்க வையகம்!    வாழ்க வளமுடன்!

# ராம்ராஜ்

## உறவுகள் மேம்பட...

**குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...**

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.

•

அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்

•

எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள். விட்டுக்கொடுங்கள்

•

சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.

•

நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்

•

உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்

•

மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்

•

அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்

•

எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்

•

கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்

•

அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்

•

உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல்,கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்

•

மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்

•

மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்

•

புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்

•

பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத்தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்

•

அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

•

பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்.

– தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

ISO 9001-2008
TÜV SÜD ISO 9001
CERTIFIED COMPANY

மதிப்பிற்குரியவர்களுக்கு...



RAMRAJ ©

காட்டன்

• வேஷ்டிகள்
• சர்ட்டுகள்
• பனியன்கள்

shop online @ www.ramrajcotton.in முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்

## வழிகாட்டும்
# விளம்பர வாசகங்கள்!

ராம்ராஜ் காட்டன் விளம்பரங்களில் வரும் வாசகங்கள் அர்த்தம் பொதிந்தவை. வாழ்வுக்கு வழிகாட்டுபவை. தன்னம்பிக்கை தந்து உரமூட்டுபவை. நம் பாரம்பரியத்தைக் காப்பவை.

❖ 'மதிப்பிற்குரியவர்களுக்கு ராம்ராஜ் வேட்டிகள்' என்ற விளம்பர வாசகம், நம் பாரம்பரிய வேட்டி கட்டிய மனிதர்களை மரியாதையாக வணங்கத்தக்க உயரத்தில் வைத்தது.

❖ திருமண வைபவங்களுக்கான பட்டு வேட்டிகள், ஷர்ட்டுகளுக்கு 'அன்பும் ஆற்றலும் இணைந்த பந்தமான பாசப்பிணைப்பு' என்ற விளம்பர வாசகத்தை வைத்து குடும்ப அன்பைப் போற்றியது.

❖ ராம்ராஜ் உள்ளாடைகளுக்கான விளம்பரத்தில் வில் வித்தைப் போட்டி நடைபெறும். வெளிநாட்டவர்கள் யாராலும் துல்லியமாக இலக்கை நோக்கிக் குறி பார்த்து அம்பு எய்ய முடியாது; சோர்ந்து போய் தலைகுனிவார்கள். ராம்ராஜ் பனியன் அணிந்த அர்ஜுன் கம்பீரமாக வருவார். அவர் அம்பை விடுவித்த அடுத்த நொடி, அது சரியாக இலக்கில் தைத்து நிற்கும். 'நம்மால் முடியும்' என்ற சிந்தனையை வலியுறுத்தும் விளம்பரம் இது. 'புயலாய் விரைந்திடு, செயலில் இறங்கிடு, மனதில் துணிந்திடு, வாகை சூடிடு' என்ற இந்த விளம்பர வாசகம் தன்னம்பிக்கை தரும்.

❖ குழந்தைகளுக்கான லிட்டில் ஸ்டார் வேட்டிகளை அறிமுகம் செய்தபோது ராம்ராஜ் செய்த விளம்பரம், 'கல்வியோடு நம் பாரம்பரிய கலாச்சாரத்தையும் காப்போம்' என்பதுதான். தந்தைக்கும் மகனுக்கும் ஒரே பார்டர் வேட்டியுடன் அதே நிற ஷர்ட் மேட்சிங் செட் அறிமுகம் செய்தபோது 'தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை' என்பதே விளம்பர வாசகம். கல்வியும் ஒழுக்கமும் எதிர்காலத் தலைமுறைக்கு முக்கியம் என்பதை வலியுறுத்தும் விளம்பரங்கள்.

❖ பாக்கெட் வைத்த வெல்க்ரோ வேட்டிகளை அறிமுகம் செய்தபோது, 'வேண்டுதலை மனதில் வைப்போம், செல்போனை வேட்டி பாக்கெட்டில் வைப்போம்' என்று விளம்பரம் செய்யப்பட்டது. ஆலயத்துக்கு செல்பவர்கள் மத்தியில் வரவேற்பு பெற்ற விளம்பரம் இது.

❖ கொரோனா நேரத்தில் ஒவ்வொரு ஊரிலும் நெசவாளர்களின் வீட்டில் பாதி தறிகளில் வேட்டியும் பாதி தறிகளில் சேலையும் நெய்யப்பட்டன. ஊரடங்கு காரணமாக விற்பனை பெரிதாக இல்லையென்றாலும்,




ராம்ராஜ் காட்டன் தொடர்ந்து நெசவாளர்களுக்கு வேலை கொடுத்து வேட்டிகளைக் கொள்முதல் செய்தது. நெசவாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்ற அக்கறையுடன் இது நடைபெற்றது. ஆனால், சேலைகளை வாங்க ஆர்டர் கொடுத்தவர்கள் வரவில்லை. மிகுந்த சிரமத்திற்கு ஆளான நெசவாளர்கள், "எங்களுடைய சேலைகளையும் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கேட்டனர். நெசவாளர்களின் நலன் காக்க இதைச் செய்ய ஆரம்பித்து, இன்று ராம்ராஜ் ஷோரூம்களில் பெண்களுக்கு என்று தனிப் பிரிவே உருவாகியுள்ளது.

❖ இப்போது 'திரிசூல்' என்ற புதிய அறிமுகம். மூன்று நிற ஜரிகை பார்டர் வேட்டிகள் ஒரே பேக்கில்! செல்வமும் செல்வாக்கும் பெருகச் செய்து மங்களம் அருளும் தங்க ஜரிகை வேட்டி ஒன்று. அறிவில் உயர்வு தந்து, செல்லும் இடங்களில் எல்லாம் மரியாதை பெற்றுத் தரும் வெள்ளி ஜரிகை வேட்டி ஒன்று. எங்கும் எதிலும் கம்பீரம் தரும் வீரத்தின் அடையாளமாக செம்பு ஜரிகை வேட்டி ஒன்று.




# வெண்மை: இது 10 ஆண்டுப் பயணம்!

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் சார்பில் வெளிவரும் 'வெண்மை எண்ணங்கள்' மாத இதழ் பத்தாவது ஆண்டை நிறைவு செய்கிறது. 'பொருள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்குப் பலரும் அன்பளிப்பாக நிறையப் பொருட்களைத் தருகிறார்கள். நாம் கொடுக்கிற அன்பளிப்பு ஏதோ ஒரு பொருளாக இல்லாமல், வாழ்வை வளமாக்கும் சிந்தனைகளைத் தந்து வழிகாட்டும் ஒரு புத்தகமாக இருந்தால் வாடிக்கையாளர்கள் வரவேற்பார்கள்' என்ற நம்பிக்கையில் 'வெண்மை எண்ணங்கள்' மாத இதழை 2012 நவம்பர் மாதம் தொடங்கினோம்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு 'வாழ்விற்கு வழிகாட்டும் நல்ல எண்ணங்களைப் பரிசளிக்க வேண்டும்' என்கிற உயரிய நோக்கத்தோடு பல செயல்களைச் செய்து வருகிறோம். தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவியபோது நிலவேம்புக் குடிநீர் பற்றி விழிப்புணர்வு செய்தோம். கொரோனா நேரத்தில் கபசுரக் குடிநீரின் பலன்கள் குறித்து விளம்பரங்கள் செய்தோம். மூத்த நடிகர், பன்முகக் கலைஞர் திரு. சிவகுமார் அவர்களின் மகாபாரத உரையை தொலைக்காட்சியில் ஒளிபரப்பினோம். சமீபத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் வனம் இந்தியா பவுண்டேஷன் நிகழ்வில் ஆற்றிய உரையையும் டி.வி–யில் ஒளிபரப்பிச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தினோம். சொல்வேந்தர் சுகி சிவம் அவர்களின் உரைகளை சி.டி., வடிவில் வெளியிட்டு மக்களிடம் சேர்த்திருக்கிறோம்.

அந்த வகையில் ஒரு தொடர்ச்சியான பணி, வெண்மை மாத இதழ். தரமான உடைகளை விரும்பி வாங்கும் 'ராம்ராஜ் காட்டன்' வாடிக்கையாளர்களுக்கு, தரமான சிந்தனைகளை உருவாக்கும் 'வெண்மை எண்ணங்கள்' இதழ் பிடிக்கும் என நம்பினோம். மக்களுக்குத் தேவையான அனைத்தையும் தேடித்தேடி வழங்க வேண்டும் என்பதில் ஆரம்பம் முதலே உறுதியாக இருக்கிறோம். அனைவருக்கும் பயனுள்ள சிந்தனைகளோடு, வாழ்விற்கு வழிகாட்டும் கருத்துகளைத் தாங்கி, 'வெண்மை எண்ணங்கள்' ஒவ்வொரு மாதமும் வெளிவரும்போது, கிடைக்கிற பாராட்டுகள் மெய்சிலிர்ப்பு தருகின்றன.

ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் ஆண்டுச் சந்தா செலுத்தி, "ஒவ்வொரு மாதமும் 'வெண்மை' இதழை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்" என்று கேட்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு தலைப்பு எடுத்துக்கொண்டு, அது தொடர்பான அத்தனை நல்ல விஷயங்களையும் திரட்டிச் சிறப்பிதழாகத் தொடர்ந்து தருகிறோம். பலர், "அடுத்த மாத 'வெண்மை' என்ன சிறப்பிதழ்?" என்று கேட்கிற அளவுக்கு எதிர்பார்ப்பு கிடைத்திருக்கிறது. "வெண்மை முதல் மாத இதழிலிருந்து ஒவ்வொரு இதழையும் சேகரித்து எங்கள் வீட்டில் பொக்கிஷமாக வைத்திருக்கிறோம்" என்று பெருமிதத்துடன் பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். "இதைச் சந்தா செலுத்தி வாங்கி, என் உறவினர்கள் பத்து பேருக்கு அன்புப் பரிசாகக் கொடுக்கிறேன்" என்று பெருமைப்படும் பலரின் அன்பில் நெகிழ்ந்திருக்கிறோம்.

இன்று தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என நான்கு மொழிகளில் வெளிவருகிறது 'வெண்மை' இதழ். ஒவ்வொரு மாதமும் நல்ல நெறிகளை, நல்ல நம்பிக்கைகளை, நல்ல செயல்களின் வீரியத்தை, ராம்ராஜ் காட்டன் பொருளை வாங்கும் பல்லாயிரம் வாடிக்கையாளர்களின் நெஞ்சங்களில் 'வெண்மை எண்ணங்கள்' விதைக்கிறது. இந்த இனிய பயணம், மனம் விரும்பும் பந்தம் அனைவரின் ஆதரவுடன் தொடரும். ●

## கொங்கு சாதனையாளர் விருது!

**பொ**ள்ளாச்சியில் இருக்கும் என்.ஜ.ஏ கல்வி நிறுவனங்கள் சார்பில் வழங்கப்படும், பெருமைக்குரிய 'கொங்குநாட்டுச் சாதனையாளர் விருது', திரு. கே.ஆர்.நாகராஜனுக்கு வழங்கப்பட்டது. கோவை பாரதீய வித்யா பவன் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்களும், என்.ஜ.ஏ கல்வி நிறுவனங்களின் தலைவரும், சக்தி சுகர்ஸ் லிமிடெடின் செயல் தலைவருமான டாக்டர் ம.மாணிக்கம் அவர்களும் இணைந்து இந்த விருதினை வழங்கினர்.








## 'மகுடம்' விருது!

**தொ**ழில், கலை, இலக்கியம், சினிமா, விளையாட்டு, சமூக சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை நிகழ்த்தியவர்களை கௌரவிக்கும் வகையில் நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சி, 'மகுடம்' விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இதில் சிறந்த தொழில்முனைவோருக்கான மகுடம் விருது, 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜனுக்கு வழங்கப்பட்டது. சென்னையில் நடைபெற்ற விழாவில், தெலங்கானா மாநில ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் இந்த விருதை வழங்கிக் கௌரவித்தார்.

## சிறந்த பாரம்பரிய உடை விருது!

**இ**ந்தியா முழுக்க இருக்கிற வியாபார நிறுவனங்களை ஒருங்கிணைக்கிறது, Retailers Association of India (RAI) எனப்படுகிற இந்திய ரீடெய்ல் விற்பனையாளர்கள் சங்கம். இந்த அமைப்பின் சார்பில், இந்தியாவின் மிகச்சிறந்த பிராண்ட்களுக்கு விருது வழங்கப்படுகிறது. இதில், 'இந்தியாவின் மிகச்சிறந்த ஆண்களுக்கான பாரம்பரிய உடை' (Best Ethnic wear of the year – Men) என்ற விருதை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் வென்றுள்ளது. இந்த விருதைப் பெற்றுக்கொண்டு, "உலகிற்கே ஆடை நெய்து தரும் நெசவாளர்கள் நல்ல உடை உடுத்தி, நல்ல உணவருந்தி, பாதுகாப்பான இடத்தில் வாழ்வதற்குத் தேவையான வாழ்வாதாரங்களைத் தருவதையே ராம்ராஜ் காட்டன் லட்சியமாகக் கொண்டிருக்கிறது. இன்று முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ராம்ராஜ் காட்டன் வழி செய்திருக்கிறது" என்று திரு. கே.ஆர்.நாகராஜன் கூறியபோது அரங்கத்தில் இருந்தவர்கள் எழுந்து நின்று கைதட்டினார்கள்.







## வேட்டிக்காக நீண்ட க்யூ!

**2016**-ம் ஆண்டு நவம்பர் 8-ம் தேதி பண மதிப்பிழப்பு நடவடிக்கையை அமல்படுத்தியது மத்திய அரசு. நாட்டின் நலன் கருதி எடுக்கப்பட்ட முடிவு என்றாலும், கையில் பணப்புழக்கம் இல்லாமல் மக்கள் தவித்தனர். நெசவாளர்களும் தொழில் முடங்கிச் சிரமப்பட்டனர். அந்த நேரத்தில், நஷ்டம் அடைந்தாலும் பரவாயில்லை என்று தரமான வேட்டியை நூறு ரூபாய்க்கு விற்றோம். 2017 ஜனவரி முதல் வாரத்தை வேட்டி வாரமாகக் கொண்டாடி, நூறு ரூபாய்க்கு வேட்டியைத் தந்தோம். வங்கிகள் மற்றும் ஏ.டி.எம்., வாசலில் பணம் எடுப்பதற்காக மக்கள் க்யூவில் நின்றது போல, ராம்ராஜ் காட்டன் ஷோரூம்களில் வேட்டி வாங்க க்யூவில் நின்றது தலைப்புச் செய்தியானது. வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் தரமான வேட்டி கிடைத்தது. நெசவாளர்களுக்கும் தொழில் கிடைத்தது.




## இந்தியாவின் நம்பிக்கையான பிராண்ட்!

**டி.**ஆர்.ஏ எனப்படும் டிரஸ்ட் ரிசர்ச் அட்வைஸரி (Trust Research Advisory) என்ற அமைப்பு, இந்தியா முழுக்க விற்கப்படும் ஏராளமான நிறுவனங்களின் 11 ஆயிரம் பிராண்ட் பொருட்களை ஆய்வு செய்கிறது. கார்களில் ஆரம்பித்து குளிர்பானங்கள், உள்ளாடைகள் வரை இந்தியாவில் விற்கப்படும் அனைத்து நிறுவனங்களின் பிராண்ட் பொருட்களையும் சர்வதேச அளவீடுகளின்படி நுணுக்கமாக ஆய்வு செய்து ஆண்டுதோறும் விருது வழங்குகிறது. அதன் அடிப்படையில் 'இந்தியாவின் மிக நம்பகமான வேட்டி பிராண்ட்' என்ற விருதை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பெற்றுவருகிறது.

## உயிர்க் கவசம் உருவாக்கிய ராம்ராஜ்!

**கொ**ரோனா தொற்று ஏற்பட்டபோது, முகக்கவசங்களுக்கு கடும் தட்டுப்பாடு உருவானது. எல்லோருக்கும் அது அவசியம் என்ற நிலையில், தேவைக்கு ஏற்ப உற்பத்தி நடக்கவில்லை. டாக்டர்களே முகக்கவசம் கிடைக்காமல் சிரமப்பட்டனர். அந்த நேரத்தில் அரசின் அனுமதி பெற்று முகக்கவசம் தயாரிக்க ஆரம்பித்தது ராம்ராஜ் காட்டன். துவைத்து திரும்பவும் பயன்படுத்துகிற மாதிரியான முகக்கவசங்கள். அணிபவருக்கு முகத்திலோ, காதிலோ வடு ஏற்படுத்தாத இதமான வடிவம் கொண்ட இந்த உயிர்க்கவசங்கள் பெரும் வரவேற்பு பெற்றன. எல்லோருக்கும் பொருத்தமான வடிவத்தில் 'மேட் இன் இந்தியா' முத்திரையுடன் இவை விரும்பி வாங்கப்பட்டன.






## 'தமிழன்' விருது!

**'அ**ழகிய தமிழ்மகன்களை அடையாளப்படுத்த வேட்டியை மீட்டெடுத்தவர். வறிய நெசவாளர்களின் வலியை நீக்க தறியே தீர்வு என்று அன்றே உறுதி கொண்டவர்' என்று கௌரவப்படுத்தி, ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜனுக்கு புதிய தலைமுறை தொலைக்காட்சி 'தமிழன் விருது' வழங்கியது. எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழக நிறுவனர் திரு. பாரிவேந்தர் மற்றும் தொழிலதிபர் அபிராமி திரு. ராமநாதன் ஆகியோர் இணைந்து விருது வழங்கினார்கள்.

# வெற்றி நலவாழ்வு மையம் தொடக்க விழாவில் ராம்ராஜ்!



**ரா**ம்ராஜ் காட்டன் நிறுவனம் பாசிட்டிவான எண்ணமும், செயலும் சமுதாயத்தில் பரவலாக வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு அறப்பணிகளைச் செய்து வருகிறது. அந்த வகையில் மக்கள் நலவாழ்விற்குத் துணைசெய்யும் வாழ்வியல் பயிற்சிகளை அளிக்க, ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் ஆதரவோடு திருப்பூரில் 'வெற்றி நலவாழ்வு மையம்', மார்கண்டேயர் நடிகர் சிவகுமார் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. வெற்றி நலவாழ்வு மையத்தில் இளம்பருவ மனித வாழ்வின் ஆற்றலையும், மகத்துவத்தையும் உணர்த்தும் 'பதின்பருவம்' பயிற்சி, வெற்றிகரமான திருமண வாழ்விற்கு மருத்துவம், உளவியல் ஆலோசனைகளோடு கூடிய 'சம்பந்தம்' பயிற்சி, உடல்தகுதியும் அறிவுநலனும் அமைந்த குழந்தையைப் பெற்றெடுக்க அனைத்து வழிமுறைகளையும் உள்ளடக்கிய 'கர்ப்ப கிருபா' பயிற்சி, முதுமை வாழ்வில் உடல்நலமும், மனமகிழ்வும் பெறுவதற்கான, 'அனுபூதி' பயிற்சி என நான்கு வகையான வாழ்வியல் பயிற்சிகள் சிறந்த முறையில் அளிக்கப்படுகின்றன. வியக்கத்தக்க பலனளிக்கும் இந்தப் பயிற்சிகளைத் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டு வருகிறது.



# உழவர் உற்பத்தியாளர் விழாவில் ராம்ராஜ்!

**வி**வசாயிகள் தாங்கள் விளைச்சல் செய்யும் பொருட்களை மதிப்பு கூட்டி விற்றால் அதிக லாபம் பெற முடியும். இப்படி உழவர்களை உற்பத்தியாளர்களாக மாற்றுவதற்கு உலக தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் இந்த நிறுவனத்தில் 1,200 பங்குதாரர்கள் இணைந்திருக்கிறார்கள். ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் இதன் இயக்குநராக இருக்கிறார்.

தென்னை விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், தென்னை மரத்திலிருந்து 'நீரா' பானம் மற்றும் தென்னை சர்க்கரை, வெல்லம், தேன் போன்ற பல்வேறு இயற்கைப் பொருட்களை உருவாக்கிச் சந்தைப்படுத்தும் பணியை இந்த நிறுவனம் செய்கிறது. தென்னீரா பானத்தைச் சில மாதங்களுக்கு முன் இந்த நிறுவனம் அறிமுகம் செய்தது. தமிழக செய்தித்துறை அமைச்சர் மாண்புமிகு மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், தமிழக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தென்னீரா இயற்கை பானத்தை அறிமுகம் செய்துவைத்தார்.

# கவிஞர்கள் திருவிழாவில் ராம்ராஜ்!

**வெ**ற்றித் தமிழர் பேரவை அமைப்பை திருப்பூர் மாவட்டத்திலும் கொங்கு மண்டலத்திலும் முக்கியப் பொறுப்பில் இருந்து நடத்தி வருகிறார் திரு. கே.ஆர்.நாகராஜன். இந்த அமைப்பின் சார்பில் கவிஞர்கள் திருநாள் மற்றும் கலை இலக்கியத் திருவிழா கொடிசியா அரங்கில் நடத்தப்பட்டது. தமிழகப் பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும், திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நடைப் பேரணியும் நடைபெற்றது. விழாவில் மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களுக்கு ராம்ராஜ் காட்டன் அதிபர் திரு. கே.ஆர்.நாகராஜன் மாலை அணிவித்து சிறப்பித்தார்.



# நகைச்சுவை மன்றத்தில் ராம்ராஜ்!




**செ**ன்னை, திருவல்லிக்கேணி நகைச்சுவை மன்றம், மக்களை மனம் மகிழச் செய்யும் பல நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. நகைச்சுவை சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் என்று இந்த அமைப்பு நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு ராம்ராஜ் காட்டன் தொடர்ச்சியாகப் பங்களித்து வருகிறது. இந்த அமைப்பின் நிகழ்ச்சிகளில் திரு. கே.ஆர்.நாகராஜன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுவார். திருப்பூரில் நகைச்சுவை மன்றத்தை உருவாக்கி, அங்கு தொடர்ச்சியாக மக்களை மகிழ்விக்கும் நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறார்.

# கலைஞர் அருகில்!

**க**விப்பேரரசு வைரமுத்துவின் 'வைரமுத்து சிறுகதைகள்' நூலின் 2500 பிரதிகள், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்துடன் இணைந்து வெளியிடப்பட்டன. சென்னையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில், நூலின் முதல் பிரதியைக் கலைஞர் அவர்கள் வெளியிட, நடிகர் திரு. கமல்ஹாசன் பெற்றுக்கொண்டார். விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜனுக்கு கலைஞர் முன்னிலையில் நூலின் பிரதியை வழங்கினார் கவிப்பேரரசு வைரமுத்து.








# இலக்கிய விழாக்களில் ராம்ராஜ்!

**தி**னமணி நாளிதழ் நடத்திய தமிழ் இலக்கியத் திருவிழா, திருப்பூர் கம்பன் கழக விழாக்கள், நடிகர் சிவகுமார் அவர்களின் நூல் வெளியீட்டு விழாக்கள், ஓவியக் கண்காட்சிகள், புத்தகத் திருவிழாக்கள் என்று இலக்கியம் மற்றும் கலைகள் போற்றும் விழாக்களில் ராம்ராஜ் காட்டன் தொடர்ச்சியாக அக்கறையுடன் பங்கேற்று தமிழ் வளர்க்கும் பணிகளைச் செய்கிறது.

# அப்துல் கலாமை கொண்டாடிய ராம்ராஜ்!

**தி**ருப்பூரில் கம்பன் கழகம் தொடக்க விழாவுக்காக அழைக்க, முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் சந்தித்தார். அதன்பின் டெல்லி, சென்னை, கோவை எனப் பல இடங்களில் அன்பின் நிமித்தமாகச் சந்திப்புகள் நிகழ்ந்தன. பார்க்கிறபோதெல்லாம், பாசிட்டிவான எண்ணங்களைப் பகிர்ந்து, தன்னம்பிக்கை ஊட்டுவார். நாகராஜனின் சமுதாயச் செயல்பாடுகளைப் பாராட்டியுள்ளார். சேவை அமைப்புகள், பொதுநலச் சங்கங்கள் ஆகியவற்றின் விழாக்களில் நாகராஜனுடன் இணைந்து பங்கேற்றுள்ளார். கலாம் அவர்களின் மறைவின்போது, 'வெண்மை' மாத இதழ் அவருக்காக சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியது. ●



# குடும்பத்தில் அமைதி நிலைக்க 10வழிகள்

● அருள்தந்தை

## 1

நாம் பெற்ற ஞானத்தைப் பயன்படுத்தும் இடம் குடும்பமே! நம் குடும்ப அமைதியே உலக அமைதிக்கு வித்தாகும்.

## 2

உலகில் கணவன் - மனைவி உறவுக்கு இணையாக வேறு எந்த உறவையும் சொல்ல முடியாது.

## 3

குடும்பத்தை அறிவுதான் நிர்வாகம் செய்ய வேண்டும். எந்த நிலையிலும் உணர்ச்சிகள் நிர்வாகம் செய்யக்கூடாது.

## 4

குடும்ப அமைதியைக் காப்பதில் வரவுக்குள் செலவை நிலைநிறுத்தும் செயலும் ஒன்றாகும்.

## 5

குடும்பத்தில் அனைவரும் அல்லது பெரும்பான்மையோர் சம்பாதிக்கும் திறன் பெற்றிருப்பது நலம். அதில் ஏற்றத்தாழ்வு இருப்பினும் அதைக் காப்பது, அனுபவிப்பது, செலவிடுவது ஆகிய செயல்பாடுகளில் சமமான பொறுப்பு வைத்தல் வேண்டும்.

## 6

குடும்பத்தில் கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் சம்பாதித்தல், செலவு செய்தல், சேமித்தல் என்பது அறவே கூடாது.

## 7

விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் ஆகிய மூன்றையும் கடைப்பிடித்து வந்தால், குடும்பத்தில் அமைதி நிலவும்.

## 8

பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமல் இருப்பதும், பொறுமை காப்பதும், தவறுகளை மறத்தலும் குடும்ப அமைதிக்கு அடிப்படையான குணங்கள்.

## 9

கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி யாரும் குறைகொள்ளத் தேவையில்லை. அவரவர் அடிமனமே இதைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது.



## 10

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம். நல்ல குடும்பத்தில் நன்மக்கள் தழைப்பார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க, குடும்ப அமைதி அவசியமானது.

# மனதுக்கும் கொண்டாடுங்கள் தீபாவளி!



காலமாற்றங்களுக்கு ஏற்றபடி நம்மை புதுப்பித்துக்கொள்வது அவசியம். இல்லையெனில், நமக்கும் நம் குழந்தைகளுக்கும் இடையில் இடைவெளி அதிகரித்துவிடும். அதேநேரம், நம்முடைய பாரம்பரியப் பெருமைகளை இந்த மாற்றங்கள் விழுங்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அடுத்த தலைமுறைக்கு அதன் முக்கியத்துவம் சொல்லித் தர வேண்டியதும் அவசியம். நமது பண்டிகைகள், நம் பாரம்பரியத்தின் அடையாளம்.

'எதற்கும் நேரம் இல்லை' என்று ஓடிக்கொண்டிருக்கிற காலத்தில், பண்டிகைகள்தான் நம்மை நிறுத்தி ஆசுவாசப்படுத்துகின்றன. ஓட்டப்பந்தயத்தில் வேகமாக ஓடினால்தான் வெற்றி கிடைக்கும். ஆனால், மனித வாழ்க்கை வெறும் பந்தயம் அல்ல. கொண்டாட்டங்கள்தான் வாழ்வை இனிமையாக மாற்றுகின்றன. பண்டிகைகள் தனிப்பட்ட சிலருக்கு மட்டும் மகிழ்ச்சி தருவதில்லை. சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி தருகின்றன.

நம் பண்டிகைகளில் தீபாவளி தனித்துவமானது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தும் திருநாள் தீபாவளி. 'நம் இல்லங்களில், நன்மையின் வெளிச்சம் பரவும்' என்கிற நம்பிக்கையை ஏற்படுத்துகிற பண்டிகை தீபாவளி.

'தீபம்' என்றால் 'விளக்கு'. 'ஆவளி' என்றால் 'வரிசை'. தீபாவளி நாளில் வீட்டில் வரிசையாக விளக்கேற்றி அலங்கரித்து, இருண்டு இருக்கும் வீட்டைப் பிரகாசமாக வைப்பார்கள். ஒவ்வொருவர் மனதிலும் கொஞ்சம் இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, கோபம் போன்ற அந்தத் தீய குணங்களை எரித்துவிட வேண்டும். ஞானம் என்ற விளக்கொளியால் மனதின் உள்ளே குடிகொண்டுள்ள அஞ்ஞான இருளை விரட்டியடிப்பதே தீபாவளியின் தத்துவம். வீடு முழுக்கத் தீபம் ஏற்றி வெளிச்சம் கொண்டுவந்துவிட்டு மனதை இருட்டாக வைத்துக்கொள்ளக் கூடாது. அதற்குப் பெயர் தீபாவளி அல்ல. மனதில் இருக்கும் அழுக்கை அகற்றி மனதிற்குள் தீபம் ஏற்றுவதுதான் தீபாவளி.

நாம் புனிதமாவதற்குத்தான் வெடி வெடிக்கிறோம். அதாவது சில பொருட்களை அழிப்பதற்கு அவற்றைத் தீயில் போட்டுவிடுகிறோம் அல்லவா? அதுபோல நமது மனதில் இருந்த தீய எண்ணங்களை வெடி வெடிப்பது போல் சிதறடித்துவிட வேண்டும் என்பதற்காகத்தான் பட்டாசு வெடிக்கிறோம்.

தீபாவளி அன்று அதிகாலை தலைகுளிப்பதை 'கங்கா ஸ்நானம்' என்று அழைப்பதற்கும் அதுதான் காரணம். அன்றைய தினம் குளிப்பதன் மூலம் நாம் புனிதமடைகிறோம். நம் உடலைப் போலவே மனதும் தூய்மையடைவதால்தான் அதனை 'கங்கா ஸ்நானம்' என்கிறார்கள்.

'தீபாவளித் திருநாளில் நாம் பயன்படுத்தும் எண்ணெயில் லட்சுமிதேவியும், சீயக்காயில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமிதேவியும், குங்குமத்தில் கௌரியும், பூக்களில் மோகினிகளும், தண்ணீரில் கங்கையும், புத்தாடைகளில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும், இனிப்பு பண்டங்களில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும், நெருப்புப் பொறிகளில் ஜீவாத்மாவும் வாசம் செய்து நமக்கு அருள்பாலிக்கிறார்கள். நம் குடும்பத்தாரை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து வருகிறார்கள்' என்று சனாதன முனிவர் தீபாவளி வழிபாடுகள் பற்றி உபதேசம் செய்திருக்கிறார்.

ஏழை, பணக்காரர் வித்தியாசமின்றி, குழந்தைகள், பெரியவர்கள் என்ற வேறுபாடு இல்லாமல், தீபாவளி என்றாலே அனைவருக்கும் மனதில் ஒருவிதக் கொண்டாட்டம். புத்தாடை அணிந்து, பலகாரம் செய்து, பட்டாசு வெடித்து, விருந்தினர்கள், நண்பர்களோடு தீபாவளியைக் கோலாகலமாகக் கொண்டாடுவோம்.



## ஐ.ஏ.எஸ் பயிற்சிக்கு உதவி!

**செ**ன்னை போன்ற மாநகரங்களின் மாணவர்களுக்குக் கிடைப்பதைப் போன்ற அத்தனை வாய்ப்புகளும், தமிழ்நாட்டின் உள்ளடங்கிய கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டது சிகரம் ஐ.ஏ.எஸ் பயிற்சி நிலையம். உறைவிடமும் உணவும் வழங்கி, இலவசமாகப் பயிற்சியளிக்கிறது இது. இதுவரை 19 பேர் இங்கு பயிற்சி பெற்று பணிக்குச் சென்றுள்ளனர். இதன் தலைவராக நடிகர் திரு. சிவகுமார், செயலாளராக 'பரணி பில்டர்ஸ்' திரு. கே.பாலசுப்ரமணி, பொருளாளராக 'சக்தி மசாலா' நிர்வாக இயக்குநர் டாக்டர் பி.சி.துரைசாமி ஆகியோர் செயல்படுகிறார்கள். சிகரம் ஐ.ஏ.எஸ் பயிற்சி நிலைய அறக்கட்டளைக்கு முக்கியமான நன்கொடையாளராக ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் இருக்கிறார். சென்னை அண்ணா நகர் ராம்ராஜ் காட்டன் ஷோரூம் லாபம் முழுக்க இதற்காக வழங்கப்படுகிறது.

## உயர்கல்வி உதவிக்காக ஒரு கோடி ரூபாய்!

**ந**டிகர் திரு. சூர்யாவின் அகரம் அறக்கட்டளை சார்பில், அடித்தட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உயர்கல்வி அளிப்பதற்காக 'விதை' என்ற திட்டம் 2010–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்போது அதற்காக ராம்ராஜ் காட்டன் சார்பில் 10 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2020 பிப்ரவரியில் ஒரு கோடி ரூபாய் நிதியுதவி அளித்திருக்கிறார், ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன்.




## கொரோனா நிவாரண நிதி ரூ.1 கோடி



❖ கொரோனா பேரிடர் காலத்தில் தமிழக மக்களின் துயர் துடைக்கும் பணிகளில் பங்கேற்கும் விதமாக, முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் ரூபாய் ஒரு கோடி வழங்கியது. தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள் ரூபாய் ஒரு கோடிக்கான காசோலையை வழங்கினார். ராம்ராஜ் நிர்வாக இயக்குநர்கள் திரு. B.R. அருண் ஈஸ்வர் மற்றும் திரு. S. அஸ்வின் ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள ஐ.ஆர்.டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிய வார்டு கட்டுவதற்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் ரூ.10 லட்சம் நன்கொடையாக அளித்தது.

❖ உலக சமுதாய சேவா சங்கம் மற்றும் ஆழியாறு அறிவுத் திருக்கோயில் சார்பில் கொரோனா நிவாரண நிதி ரூ. 2 கோடி, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களிடம் வழங்கப்பட்டது. தமிழக வீட்டுவசதித் துறை அமைச்சர் மாண்புமிகு சு. முத்துசாமி அவர்கள் முன்னிலையில், உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ SKM. மயிலானந்தன், துணைத்தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. K.R. நாகராஜன், ஆழியாறு அறிவுத் திருக்கோயில் நிர்வாகி திரு. P. முருகானந்தம் ஆகியோர் இதை வழங்கினர்.



## பசுமைக்காக லாபம் அர்ப்பணிப்பு!

**த**மிழகத்தைப் பசுமையாக்கும் முயற்சிகளில் தொடர்ச்சியாக ராம்ராஜ் காட்டன் பங்கெடுத்து வருகிறது. திருப்பூர் மாவட்டம் பல்லடம் வனம் இந்தியா பவுண்டேஷன் செயல்பாடுகளுக்காக அங்கிருக்கும் ராம்ராஜ் காட்டன் ஷோரூமின் ஒட்டுமொத்த லாபத்தையும் அளிக்கிறது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்த வசதியாக, அந்த அமைப்புக்காக 75 லட்சம் ரூபாய் செலவில் பசுமை ரதம் ஒன்றையும் அளித்துள்ளது ராம்ராஜ் காட்டன்.

## ஆசிரியர்களைப் போற்றுவோம்!

**சி**றப்பாகக் கற்றுத் தரும் அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு 'இந்து தமிழ்' நாளிதழுடன் இணைந்து 'அன்பாசிரியர்' விருது வழங்கிவருகிறது ராம்ராஜ் காட்டன் நிறுவனம். 2020 முதல் ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகிறது.





## புயல் நிவாரணத்துக்கு ரூ.45 லட்சம்!

**க**டலூர் மாவட்டத்தை 2016–ம் ஆண்டு வெள்ளம் பாதித்தபோது, ஆயிரக்கணக்கான மக்களுக்கு உடைகள் வழங்கியது ராம்ராஜ் காட்டன். 2018–ம் ஆண்டு கஜா புயல் காரணமாக நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை உள்பட காவிரி டெல்டாவில் இருக்கும் ஏழு மாவட்டங்களில் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு உதவ ராம்ராஜ் தயாரிப்புகளான ரூ.45 லட்சம் மதிப்பிலான உடைகள் அனுப்பி வைக்கப்பட்டன.







## திருப்பூர் பசுமைப்பணியில் ராம்ராஜ்!

**தி**ருப்பூர் மாவட்டத்தைப் பசுமை மாவட்டமாக மாற்றுவதற்காக 'வனத்துக்குள் திருப்பூர்' திட்டம் கடந்த 2015–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. மூன்று லட்சத்துக்கும் அதிகமான மரங்களை நட்டுப் பராமரிக்கும் இந்தத் திட்டத்தில் ராம்ராஜ் இணைந்தது. மரங்களுக்கு 3 ஆண்டுகள் தொடர்ச்சியாக டிராக்டர் மூலம் தண்ணீர் ஊற்றிப் பராமரித்து வளர்க்கச் செய்த ராம்ராஜ் காட்டன் நிறுவனத்துக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நடிகரும் 'கிரீன் கலாம்' இயக்க நிறுவனருமான திரு. விவேக் இதற்கான பாராட்டுச் சான்றிதழை திரு. கே.ஆர்.நாகராஜனுக்கு வழங்கினார். ●

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.




## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**


Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL




Inners for Winners

RAMRAJ ©

BANIANS • BRIEFS • TRUNKS

SUKRA® Super Fine Banians
ROMEX® Supreme Banians
RISE-UP® Premium Banians
ARCHERY® Gym Vest
COMPACT® Flexible Rib Vest
ACOSTE® BANIANS | BRIEF | TRUNKS

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-10-2022. Posted at Tirupur BPC on 5th of every month.

